
# சின்னஞ் சிறிய பூக்கள் - 4



Divisional Secretary
Manmunai South West
Paddipalai

# சின்னஞ்சிறிய பூக்கள்

## 4

தொகுப்பு

உதவி.நண்பர்கள்

உதவி.uthawi
uthawi.media

**சின்னஞ்சிறிய பூக்கள் .4**
தொகுப்பு – உதவி.நண்பர்கள்

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 08/2014 |
| வெளியீடு | : | உதவி.மீடியா |
| நிதி | : | பொதுசன நிதிப்பங்களிப்பு |
| அட்டை வடிவமைப்பு | : | மருது |
| நூல் வடிவமைப்பு, அச்சாக்கம் | : | கிரசன்டோ லிங் கொழும்பு. |

**Sinnansiriya Pookkal . 4**

| | | |
|---|---|---|
| Compiled by | : | uthawi.friends |
| First Published | : | 08/2014 |
| Published by | : | uthawi.media |
| Funded by | : | Crowdfunding |
| Cover by | : | Marudu |
| Design, Printed by | : | Crescendoo Link Colombo. |

uthawi.media
Postfach 1226
59884 Eslohe
Germany

web : www.uthawi.net
mail : mail@uthawi.net

facebook.com/uthawi
twitter.com/uthawi
youtube.com/uthawi
vimeo.com/uthawi

பிள்ளைகளின் பின்னால்.....

| | |
|---|---|
| சூரியகுமார் | (மட்டக்களப்பு) |
| விஜிதா | (மட்டக்களப்பு) |
| மேகராசா | (மட்டக்களப்பு) |
| குகநாதன் | (மட்டக்களப்பு) |
| தேவதாஸ் | (மட்டக்களப்பு) |
| கருணாகரகன் | (கந்தலோயா) |
| சிவசக்தி | (கந்தலோயா) |

# கூட்டுறவே நாட்டுயர்வு

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பது முது மொழி. நம் முன்னோர்கள் அனுபவரீதியாக அறிந்துகொண்ட உண்மை இது. இன்றைய உலகில் தனிமனிதராக எவரும் வாழ்ந்திட முடியாது. தம் தேவைகளைப் பெற ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழவேண்டியுள்ளது. ஒன்று கூடி வாழ்வதே உயர்ந்த வாழ்வாகும். இதனையே மகாகவி பாரதியாரும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்றுரைத்துள்ளார். இவ்வாறு வாழக் கூட்டுறவு மனப்பான்மை அடிப்படையான தாகும்.

பலர் சேர்ந்து உழைப்பதும் பகிர்ந்து உண்பதும் கூட்டுறவாகும். பலர் ஒருங்கு கூடி, பொருளிலும், உழைப்பிலும் பங்கேற்று தம்மை உயர்த்திக்கொள்வதுடன் தாம் வாழும் சமுதாயத்திற்கு நன்மை செய்யக் கருவியாய்த் திகழ்வது கூட்டுறவு அமைப்பாகும். கூட்டுறவு முறையால் நாட்டில் தொழிலும், பொருளாதாரமும் சிறப்படையும். அதுவே நாட்டுயர்வுக்கும் வழிவகுக்கும்.

மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கும், உற்பத்தியான பொருட்களை நியாய விலையில் விற்பதற்கும், தரமுள்ள பொருட்களை நியாயமான விலையில் மக்கள் வாங்குவதற்கும் கூட்டுறவே பயன்படுகின்றது. எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறை சேவை செய்கின்றது. வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகளைப் பெற இது துணைசெய்கின்றது. கூட்டுறவால் பொருளை உற்பத்தி செய்வோரும் அவற்றை நுகர்வோரும் ஒரே சமயத்தில் பயன்பெறுகின்றனர்.

கூட்டுறவு அமைப்புக்களால் மக்களிடையே ஒற்றுமையும், தன்னம்பிக்கையும் வளர்கின்றன. ஒவ்வொருவரும் தனக்காகவும் பிறருக்காகவும் உழைக்க வேண்டும் என்னும் எண்ணம் மலர்கின்றது. தனிமனிதர் என்னும் எண்ணம் மாறிச் சமுதாயம் என்ற எண்ணம் விரிகின்றது. சமுதாயம் தன்னைப் பாதுகாக்கும் என்ற எண்ணம் ஏற்படுகின்றது.

**ராதிகா**
தரம் - 11
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# கந்தலோயா
# பாடசாலையும், நண்பர்களும்


கந்தலோயா பாடசாலை மாணவி என்ற ரீதியில் உதவி.நண்பர்களை அறிந்திருக்கின்றேன். ஏன் என்றால் ஆரம்பத்தில் எங்களது பாடசாலையானது தரம் 1–8 வரையிலான வகுப்புக்களையே உள்ளடக்கி இயங்கிவந்தது. காரணம் ஏனைய வகுப்புக்களை கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறையாகும். ஆகையால் ஏனைய வகுப்புக்களை கற்பதென்றால் நகர்புற பாடசாலையையே நாடவேண்டும். சிலர் குடும்ப வருமானக் குறைவினால் வேலைக்குச் சென்றுவிடுவார்கள்.

இத் தறுவாயில் எங்களது பிரச்சினையை இனங்கண்டு, முதல் முறையாக இப் பாடசாலையில் 2011ஆம் ஆண்டில் 9ஆம் வகுப்பும், 2012ஆம் ஆண்டில் 10ஆம் வகுப்பும், 2013ஆம் ஆண்டில் 11ஆம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வகுப்புகளுக்காக இரண்டு ஆசிரியர்களுக்கான நிதியையும் உதவி.நண்பர்கள் தருகின்றனர்.

இப்பாடசாலையில் தரம் 11ம் வகுப்பு வைக்கப்படாமல் இருந்திருந்தால் எங்களில் எத்தனைபேர் மேலும் கல்வியைத் தொடர நகர்ப்புறப் பாடசாலைக்குச் சென்றிருப்போம் என்பது சிந்திக்கத்தக்கது. நண்பர்கள் எங்களுக்குச் செய்த உதவிக்குப் பதிலாக நாங்கள் கற்ற கல்வியைக் கொண்டு எம் மலையகத்தை முன்னேற்றுவோம்.

**சரண்யா**
தரம் - 10
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# சூரியன்



சூரியனாம் சூரியன்
உலகெங்குமுள்ள சூரியன்

கீழே நின்று பார்க்கும்பொழுது
நேரே உள்ள சூரியன்

வட்டமான சூரியன்
வெளிச்சம் தரும் சூரியன்

மேலிருந்து எங்களை
பார்த்து நிற்கும் சூரியன்

இரவு பகலைத் தந்திடும்
இனிமையான சூரியன்

வெயில் தரும் சூரியன்
எங்கள் உலகு காக்கும் சூரியன்

**நிரஞ்சன், அனோஜன், சதீஸ்**
தரம் - 8, 9
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# படிப்பு

அவன் ஒரு மலையக மாணவன். மலையகத்தில் ஒரு கஸ்ரமான கிராமத்தில் பிறந்தவன். அவனுடைய பெற்றோர்கள் தோட்டத் தொழிலாளியாக வேலை செய்கின்றார்கள்.

அவன் கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்றான். அவன் தரம் பதினொன்றில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் போது பாடசாலையை விட்டு விலகி கொழும்பிற்கு வேலை தேடிச்சென்றுவிட்டான்.

ஒரு கம்பனியில் லொறியில் உதவியாளராக வேலை செய்தான். அவன் வேலைசெய்யும் போது அவனுடைய மேலதிகாரியான விற்பனையாளர் பெரிய பெரிய கடைகளுக்குப் போய் பொருட்களுக்கான பற்றுச்சீட்டைப் போடுவார். அந்தப் பற்றுச்சீட்டுக்கேற்ப லொறியிலுள்ள பொருட்களை கடைகளுக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் தரும் பணத்தைச் சேகரித்துக் கொண்டு விற்பனையாளரிடம் அவன் கொடுப்பான்.

இப்படியே மூன்று மாதங்கள் கழிந்த பின் விற்பனையாளர் விடுமுறை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போய்விட்டார். அவர் போனவுடன் இவனே இரண்டு நாட்கள் விற்பனையாளராகவும் வேலை செய்தான்.

இரண்டு நாட்களுக்குப் பின் கணக்கு வழக்குகளை காட்டும் போது பணம் குறைவாகக் காணப்பட்டது. எல்லோரும் அவனை ஏசினார்கள். அவர்கள் ஏசுகையில் எழுதப் படிக்கத் தெரியாதவன் எல்லாம் எப்படி விற்பனையாளராக வேலை செய்யமுடியும்? என்று அவனை அவமதித்துப் பேசிவிட்டார்கள். அப்பொழுதே அவன் தான் படித்தேயாகவேண்டும் என்று மீண்டும் பாடசாலைக்கு வந்தான்.

அவன் தான் "நான்".

**தனுசன்**
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# நான் சென்ற கல்விச் சுற்றுலா

கல்விச் சுற்றுலா செல்வதற்காக நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 52 மாணவர்கள், 7 ஆசிரியர்கள், 10 பெற்றோர்கள் மொத்தமாக 69 பேர் தயாராக இருந்தோம்.

1ம் நாள், 12-05-2014 திங்கட்கிழமை அன்று காலை 6.30 மணியளவில் பேருந்து புறப்பட்டு 8.00 மணியளவில் மண்முனைப் பாலத்தை பார்வையிட்டோம். 2.30 மணியளவில் கன்னியாவைச் சென்றடைந்தோம். கன்னியாவிலுள்ள வெந்நீர் ஊற்று, அங்குள்ள 7 கிணறுகளையும் பார்வையிட்டு அதில் 7 கிணற்றிலும் முகம் கழுவினோம்.

3.00 மணி அளவில் திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் பூசை பார்த்தோம். அங்குள்ள சிவன் சிலை மிகவும் பெரிதாகவும் அழகாகவும் உள்ளது. அங்கு இராவணன் கல்வெட்டு இருக்கின்றது.

பின் திருகோணமலை கடற்கரைக்குச் சென்றோம், விளையாடினோம். மதிய உணவு உண்டோம். பின் அங்கிருந்து 7.00 மணியளவில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்றோம். அங்கே 06 விமானங்கள் இருந்தன. 02 விமானங்கள் ஏறியது. ஒரு விமானம் இறங்கியது. அதைப் பார்வையிட்ட பிறகு தெகிவளைக்குச் சென்றோம். உணவு உட்கொண்டோம். அங்கே தங்கினோம்.

2ம் நாளாகிய, 13-05-2014 செவ்வாய்க்கிழமை காலையில் கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேச்சர சிவன் ஆலயத்திற்குச் சென்றோம். அது கருங்கல்லாலானது. இராஜ இராஜ சோழனால் கட்டப்பட்டதாகும்.

பின்னர் நூதனசாலைக்குப் பக்கத்தில் சாப்பாட்டுக் கடை ஒன்றில் 9 மணி அளவில் சாப்பிட்டோம். நூதனசாலைக்குச் சென்றோம். அங்கு களியால் செய்த ஆதிகால மனிதர்கள், கூரிய வாள்கள், கூரிய கத்திகள், மன்னர்களின் ஆசனங்கள், நாணயங்கள், ஆரம்பகால பொருட்காட்சிப் பொருட்கள் என அக்கால வரலாற்றுப் பொருட்களை அறியக்கூடியதாக இருந்தது.

பின் தாமரைத் தடாகத்தைப் பார்த்தோம். அதில் பிடாரத்தில் நீர் வழிந்து கொண்டிருந்தது. அதைப் பார்வையிட்ட பின்பு பண்டார நாயக்காவின் நினைவு

மண்டபத்தையும் பார்வையிட்டோம். 12.00 மணியளவில் சுதந்திரச் சதுக்கம் சென்றோம். அங்கு சென்றதால் ஒரு பாடகியையும் பார்க்கக் கூடிய ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்தது.

இலங்கையின் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்காவின் சிலையும் இருந்தது. அதில் 62 தூண்கள் காணப்பட்டன. தூண்களில் அழகான ஓவியங்கள் வரையப் பட்டிருந்தது.

மதியம் 1.30 மணி அளவில் பாராளுமன்றம் சென்றோம். அங்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதிகூடிய அதிகாரம் சபாநாயகருக்கே ஆகும். பாராளுமன்றத்தினூடாக ஓடும் ஆறு தியவன ஓயா ஆகும்.


பின்னர் தெகிவளையில் ஒரு மரத்தடியில் உணவு உண்டோம். பின்பு மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்றோம். அங்கு மான்கள், குதிரைகள், சிங்கம், ஒட்டகம், பாம்புகள், யானைகள் விளையாட்டு, கிளிகள், பல பறவைகள், மிருகங்கள், பலவகையான மீன்கள் எல்லாம் அங்கு பார்வையிட்டோம்.

4.30 மணியளவில் கொழும்புக் கடற்கரைக்குச் சென்றோம். அங்கு விளையாடினோம். வெசாக் தோரணத்தையும் பார்த்தோம். கடற்கரை மிகவும் அழகாக இருந்தது. இரவு திரும்பவும் தெகிவளையில் தங்கினோம்.

3ம் நாளாகிய, 14-05-2014 புதன்கிழமை அன்று அதிகாலை வண்டி கண்டியை நோக்கிப் புறப்பட்டது. வெசாக் காரணமாக இடையில் 10.00 மணியளவில் உணவு தந்தார்கள். உண்டுவிட்டுச் சென்றோம்.

யானைகள் சரணாலயம் சென்றோம். ஆற்றில் 32 யானைகள் மட்டில் நிற்கின்றன. நீரில் குளிக்கின்றன. அதனைப் பார்வையிட்டோம்.

பின்னர் பேராதனைப் பூங்காவிற்குச் சென்றோம். இது கண்டியில் உள்ளது. இங்கு மூலிகைத் தோட்டம், ஒக்கிற் பூக்கள், பலவகையான பூக்கள், தாவரங்கள் என்பனவற்றைப் பார்த்துவிட்டு தொங்கு பாலம் ஏறினோம். பின்பு கண்டியிலுள்ள தலதாமாளிகைக்குச் சென்றோம். தங்கமுலாம் பூசப்பட்ட புத்தர் சிலை காணப்பட்டது. வெசாக்கை முன்னிட்டு சங்காபிஷேகம் செய்தார்கள். இவற்றை எல்லாம் பார்வையிட்ட பின் சங்குவாரி தமிழ் வித்தியாலயத்திற்கு தங்குவதற்குச் சென்றடைந்தோம்.


வேண்டாம்.
மரத்தை வெட்ட வேண்டாம்.
நா. லோஜேந்தன்
தரம் - 08
மட்/நாற்பது வட்டை
விபுலானந்தா வித்தியாலயம்




**நாகலட்சுமி**
தரம் - 11
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம்.
மட்டக்களப்பு.

4ம் நாளாகிய, 15-05-2014 வியாழக்கிழமை காலையில் தேயிலைத் தோட்டத்தையும் பார்த்துவிட்டு முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சென்றோம். இது மாத்தளையில் உள்ளது.

பின்னர் தம்புள்ளக் குகைக் கோயிலுக்குச் சென்று பார்த்தோம். அது மிகவும் உயரமாகவும் விசித்திரமாகவும் இருந்தது. சயனநிலைப் புத்தரின் சிலைகள், விக்கிரம இராஜ சிங்கனின் சிலைகளும் இருந்தன.

இவற்றைப் பார்வையிட்ட பின்பு உணவு சாப்பிட்டோம். பின்னர் பாசிக்குடாவுக்குச் சென்று விளையாடினோம். மாணவர்கள் ஆடிப்பாடி மிகவும் சந்தோசத்துடன் இருந்தார்கள். இவற்றுடன் கல்விச் சுற்றுலா இனிது நிறைவுற்றது. இவற்றினூடாக மாணவர்கள் கூரிய அறிவாற்றலும் மகிழ்ச்சியும் பெற்றார்கள்.



**அழகவல்லி**
தரம் - 11
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# எங்கள் ஊர்

எங்கள் ஊர் சிறியது.
எழில் மிகுந்த ஊரது.

எங்கும் பசுமை கொண்டது
எவர்க்கும் பிடிக்கும் ஊரது.

நான்கு பக்கம் பசுமை
நடுவில் ஒரு கோயில்.

அங்கு ஒரு பள்ளி
அறிவைத் தரும் அள்ளி.

ஓங்கி நிற்கும் மலைவளம்
கவரும் எங்கள் ஊர்வளம்.

**ரசிக்கா**
தரம் - 8
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# உடைந்த பேனையின் சுயசரிதை

நவீன இயந்திரத்தில் இருந்து என்னை உருவாக்கினார்கள். உருவாக்கிய என்னை விற்பனைக்குக் கொண்டு சென்றனர். என்னை ஒரு கடைக்காரர் வாங்கிச் சென்றார்.

அவரது கடையில் விற்பனைக்கு வைத்தார்.

அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்த ரமேஸ் என்னை வாங்கினான். என்னைத் தனது மேசையில் வைத்தான்.

பாடசாலையில் திடீரென ஏதோ ஒரு சத்தம். மாணவர்கள் அனைவரும் ஓடினார்கள்.

மேசையில் இருந்த நான் விழுந்தேன். அவ்வளவுதான். எனக்குள் இருந்த மையெல்லாம் வடிந்து ஓடியது.

அடுத்த நாள் காலை சுத்தம் செய்பவர்கள் என்னைக் குப்பையில் தூக்கிப் போட்டனர்.

இப்போது நான் யாருக்கும் உதவாத பேனையாகி விட்டேன்.

யாரும் பேனையை வாங்கி விடாதீர்கள். வாங்கின பேனையை தவற விடாதீர்கள். தவறிய பேனையை உடைய விடாதீர்கள். உடைந்த பேனையை குப்பையில் போட்டுவிடாதீர்கள்.

**கஜனி**
தரம் - 7
மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மட்டக்களப்பு
(இலங்கை)

# அம்மா


என்னை அம்மா பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தார். அவர் நான் கத்தும் போதெல்லாம் எனக்குப் பாலூட்டி உணவூட்டி வளர்த்தெடுத்தார்.

நான் ஓர் அளவாக இருக்கும் போது  புத்தகமும் தடியும் எடுத்துக் கொண்டு, மணல் கும்பத்தில் என்னையும் இருப்பாட்டி "கல்வியின் சிறப்பு" எனும் பாடம் சொல்லித் தருவார். அதில் நான் ஒரு பிழை விட்டால் ஒரு அடி தருவார். அப்போது நான் கத்தினால் நீ படித்து பெரியாளாக வேண்டும் என்று சொல்வார். அப்போது நான் சொல்வேன் நான் படித்து எதிர்காலத்தில் நான் ஓர் டொக்டர் ஆகுவேன் என்று.

அந்த முயற்சியோடு படித்துக் கொண்டிருக்கின்றேன். என் அம்மாவுக்கு நன்றி.

**கருணி**
தரம் - 8
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# நான் வளர்த்த செல்லப் பிராணி



நான் வளர்த்த செல்லப் பிராணி கிளி ஆகும்.
நான் வளர்த்த செல்லப் பிராணியின் நிறம் பச்சை.
நான் வளர்த்த செல்லப் பிராணி மிகவும் அழகானது.
நான் வளர்த்த செல்லப் பிராணி பழம் தின்னும்.
நான் வளர்த்த செல்லப் பிராணி பேசும்.
நான் வளர்த்த செல்லப் பிராணியின் சொண்டு சிவப்பு.

**கவிப்பிரியா**
தரம் - 6
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# கசடறக் கல்

கல்வியின் பணி கண்ணைத் திறப்பது
பல் வித்தைகளும் பாங்காய் மகிழ்வது
சொல் பல சேர்த்து சொகுசாய்ப் பேசிட
வல்லமை தந்திடும் கல்வியைப் போற்றுவோம்.

கல்வியைக் கற்றால் கனிந்திடும் வாழ்வு
கசக்குதே என்று விலகாதே நீயும்
காலத்தின் தேவை கல்வியில் உண்டு
காசினியில் கற்றோர் மறைந்திடார் என்றும்.

உலகத்தின் காலக் கண்ணாடி கற்றோர்
கோயிலில் கேட்பது மணி ஓசை
கடலில் கேட்பது அலை ஓசை
என் உள்ளத்தில் கேட்பது கல்வி ஓசைதான்.

**நறுமிகா**
தரம் - 11
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)



**கிருபாகரன்**
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.






**கிசாந்தினி**
தரம் - 10
கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.

இச்சிறுமியின் தெரியாத்தனத்தால் தெருக்கலைஞரின் உடைமைகள் அனைத்தும் தீப்பற்றி எரிய, சிறுமி அநாதையாக கைவிடப்படுகிறாள். சொத்து, பணம், உடமை என்பனவற்றுக்கப்பால் "அன்பு, நட்பு, பாசம்" முதன்மையானது என்பதை வலியுறுத்தும் வகையில், இறுதியில் தெருக்கலைஞரும் சிறுமியும் இணைவது மனிதரை நேசிக்கும் அனைவர் உள்ளத்திலும் சந்தோசத்தை அல்லது இத்திரைப்படம் சொல்லவந்த செய்தியை திருப்திப்படுத்துகிறது. சொத்து சுகத்துக்காக சண்டை செய்துகொள்ளும் எம்மிடையே இத்திரைப்படம் சஞ்சலத்தை ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாமல் உள்ளது.

**துசாந்தனி**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)



# மலரே



மலரே! மலரே!
மணம் வீசும் மலரே!
அங்கும் இங்கும்
எங்கும் பூக்கும் மலரே.

உன் இதழோ மென்மை
உன் பிறப்போ புதுமை
உன் மணமோ அருமை
உன் உருவோ அழகு
உன் நிறமோ பல வர்ணம்

அதிகாலையில் மலர்வாய்
மாலையில் வாடுவாய்
தோள்களில்
மாலையாகவும் வருவாய்.

உன்னை எல்லோரும்
விருப்பம் கொள்வர்.

**குமுதினி**
வயது - 11
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். மட்டக்களப்பு
(இலங்கை)

# தேயிலைச் செடியின் வண்டுகள்

தேயிலைச் செடியின் வண்டுகளான மலையக தாய்மாரின் நிகழும் வருத்தமான சோதனைகளால் அவர்கள் மனங்கள் இருள் நிறைந்ததாகவே உள்ளது.

பத்து வயது நிறைந்த சிறுமியின் கரங்கள் பொன் போன்று காணப்படும். ஒரு வருடம் கொழுந்து பறிக்கும் அச்சிறுமி. பின் சிறுமியின் கையை பார்வையிட்டால் மரத்துபோய் வரண்டு காணப்படும்.

அச் சிறுமியின் துன்பத்திற்கு விடைகொடுக்க முயற்சி செய்வோம்.




**குசாந்தனி**
தரம் - 8
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# மலையக நாட்டார் பாடல்கள்

நாட்டார் பாடல் எனப்படுவது நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்விலும், தொழில் செய்யும் இடங்களிலும், விழாக்களிலும் பாடும் பாடல்களாகும்.

இந்தப் பாடல்கள் தற்பொழுது மாயமாகிக் கொண்டுவருகின்றன. அதைத் தவிர்க்க எமது பாடசாலையில் அதிபர் பல முயற்சிகளில் இறங்கியுள்ளார். அதன்படி பல பாடல்களை எங்களுக்கு அறிமுகப் படுத்துகிறார். எங்களுக்கும் நிறையப் பாடல்கள் தெரியும்.

உங்களுக்காக ஒரு நையாண்டிப் பாடல்

திண்ணையத் திண்ணைய கூட்டுங்கடி
நல்ல தெருவுத் திண்ணையக் கூட்டுங்கடி
நம்மய்யா கங்காணி குந்தியிருக்க நம்ம
தெருவு திண்ணைய கூட்டுங்கடி.

காதல் பாடல்:

ஒருமணி சாக்குத் தூக்கி ஒய்யாரமா நாவருவே
வெள்ளயதா வீசிடுவே ஆசை மச்சானே – நீங்க
வெளிய நின்னு பேசிடுங்க நேச மச்சானே!

இப் பாடல்கள் எங்களுக்கு மட்டுமன்றி எம் சமூகத்திற்கும் விருப்பமானவை யாகும். இவை அழிந்து போய்விடக் கூடாது.

**குசாந்தனி**
தரம் - 8
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# சமாதானம்

சமாதானம் வருமென்று
காத்திருந்த காலம் அன்று
போர்முனையில் நான் நின்று
பொறி கலங்கும் நேரமின்று.

வெள்ளைப் புறா ஒன்று
விண்ணேறிப் பறக்கையிலே
தொல்லை இல்லை இனி
தோன்றியது சமாதானம்
என்று மனம் குளிர.

எங்கிருந்தோ அம்பு ஒன்று
விரைந்த புறா மேலே
விருக்கென்று பாய்ந்ததிங்கே.

இரக்கமற்ற வேடன் அங்கே
தன்னலம் தான் கருதி
எய்துவிட்டான் அம்புதனை.

குஞ்சுப் புறா அது
குருதி வெள்ளத்தில்
பஞ்சுப்பதுமை போல
மிதப்பதன் கொடுமை என்ன?

சமாதானப் புறா அங்கே
சாவதனைத் தேடியது.
தவிக்கின்ற மனித குலம்
சமாதானம் தேடுதிங்கே.

தேடியலைந்தாலும்
கிடைக்கவில்லை சமாதானம்.
கானலாய் தோன்றி அது
மறைந்ததெங்கே நாம் காணோம்.

வீட்டில் இல்லை சமாதானம்.
வெளியில் இல்லை சமாதானம்.
நாட்டினிலுமில்லை சமாதானமென்றால்
இனி எங்கு நாம் போவோம்.

(எழுதிய ஆண்டு 2005)




**நதியா**
தரம் - 10
சக்தி சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# மான் குட்டி

சின்ன சின்ன மான் குட்டியாம்
சிவல நிற மான் குட்டியாம்
கொம்புகள் உள்ள மான் குட்டியாம்
குதித்துத் திரியும் மான் குட்டியாம்

புள்ளிப் புள்ளி மான் குட்டியாம்
புற்கள் தின்னும் மான் குட்டியாம்
செவிகள் இரண்டும் ஆட்டுமாம்
செல்லமான மான் குட்டியாம்

அன்பு நிறைந்த மான் குட்டியாம்
அருமையான மான் குட்டியாம்
பாய்ந்து பாய்ந்து விளையாடுமாம்
பாசத்தோடு அருகில் வந்திடுமாம்.



**நிரஞ்சன்**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# ஏன்?


கரடுமுரடான ஒரு பாதையே இங்கு ஒரேயொரு போக்குவரத்து. சிறியதொரு பாடசாலை. எங்கு பார்த்தாலும் காடுகள், மலைகள். இதுவே நாம் வாழும் தோட்டம்.


எத்தனையோ காலங்களாக இந்தத் தேயிலைப் பயிர்ச்செய்கை நடைபெற்று வருகின்றது. ஆனால் எமது மக்கள் இன்றும் அப்பிடியேதான் இருக்கின்றார்கள்.

எமது தாய், தந்தையர் தேயிலைச் செடியின் கீறுபட்டும், அட்டைகளில் கடிபட்டும் பாதி இரத்தத்தை இழந்து விடுகிறார்கள்.. அதையும் அவர்கள் தாங்கிக் கொள்கிறார்கள். ஏன்? நாம்தான் படிக்கவில்லை, எமது பிள்ளைகளையாவது படிக்கவைக்கவேண்டும் என்பதற்காகத்தான்.

எமது தோட்டத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அல்லது ஒரு கிழமையில் ஒருநாள் வேலையாட்களில் யாராவது ஒருவரிற்கு பாம்பு கடித்திடும். சில வேளை அவர்கள் இறந்தும் விடுவார்கள். ஏன்? எம் ஊரில் தான் ஒரு வைத்தியசாலை கூட இல்லையே.

**தர்சிக்கா**
தரம் - 7
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)


மாணவர் துஷ்பிரயோகம்
S. நிஷாந்தனி
தரம் – 07
வித்தியாலயம்



**நிதுசன்**
தரம் - 7
விபுலானந்தர் சிறுவர் இல்லம்,
மட்டக்களப்பு.

# இயற்கை

இயற்கை ஏன் எங்களுக்கு அவசியம் என்று பார்த்தால், இயற்கை இல்லையே நாம் இல்லை. இயற்கையோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்துள்ளோம். இயற்கை எல்லாவற்றையும் விட உன்னதமானதோர் செல்வமாகும். ஒவ்வொரு மனிதராலும் இயற்கை பாதுகாக்கப்பட வேண்டும். இயற்கை மனிதருக்குத் தேவையான தூய காற்று, தேவையான மழை, அளவோடு வெப்பம் எல்லாவற்றையும் தருகின்றது.

நாம் ஒரு மரத்தை வெட்டும் முன் இரு மரத்தை நாட்டவேண்டும். இயற்கையை பாதுகாப்பதால் நன்மை உண்டு. மரத்தை அழிக்காது விட்டால் மண்சரிவு ஏற்படாது. வெள்ளப் பெருக்கு ஏற்படாது. காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடுகின்றது.

மரங்களை வெட்டினால் அதிக வெப்பம் ஏற்படும். வறட்சிநிலை வரும். நீர்ப் பற்றாக்குறை உண்டாகும். இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். நான் செய்வதைப் பார்த்து நம் குடும்பம் செய்யும். நம் குடும்பம் செய்வதைப் பார்த்து நம் கிராமம் செய்யும்.

நம் கிராமத்தில் நடைபெறும் ஒவ்வொரு கூட்டத்தின் போதும் மரங்களை வெட்ட வேண்டாம் என்று சொல்கின்றார்கள். அவர்கள் சொல்வதைக் கேட்காமல் நம் கிராமத்தில் உண்மையைச் சொல்லப்போனால் எங்கள் குடும்பத்தில் கூட மரங்களை வெட்டிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். விறகு, வேலி, வீடு கட்ட சிறாம்பி கட்டுவதற்கு மேலும் பல தொழில் செய்வதற்காகவும் எடுக்கின்றார்கள். அதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவரவர் தம் குடும்பத்தைப் பார்ப்பதற்காக அத் தொழில்களைச் செய்தாலும் கூட அதனால்தான் எமக்கு தீமை என்பது அவர்களுக்குப் புரியவில்லை?

ஒவ்வொரு மனிதரும் தன் சகோதரர், பெற்றோர், பிள்ளைகளை பார்த்து இருப்பது போல இயற்கையையும் பார்க்கவேண்டும். நான் காலையில் எழுந்து பார்க்கும் போது காகம், குயில் போன்ற பறவையின் ஓசைகள் உன்னதமான சங்கீதமாகக் கேட்கின்றது. இந்த இயற்கை பாதுகாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மிதுனா**
தரம் - 10
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# சூழல் மாசடைதல்

எம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் சூழல் எனப்படும். மனிதராகிய நாம் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு சூழல் அவசியமாகின்றது. மனிதரது எல்லாத் தேவைகளுக்கும் சூழலே இருப்பிடமாகும். எனவே எமது வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய சூழலைப் பற்றிச் சிந்திப்பது மிக மிக அவசியமாகும்.

நம்மைச் சூழவுள்ள நிலம், நீர், வளி அனைத்தும் சூழலே. இவை பல்வேறு காரணிகளால் மாசடைகின்றன. மனிதர் தமது தேவைக்காகவே இவற்றை மாசடையச் செய்கின்றனர். இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் மண் அரிப்பு ஏற்படுகின்றது. காடுகளை அழிப்பதனால் மழை வளம் குறைவடைகின்றது.

சனத்தொகை அதிகரிப்பதனால் அதிகளவு உணவு உற்பத்தி அவசியமாகின்றது. உணவுப் பொருட்கள் விற்பனையில் பெரும் பணம் சம்பாதிக்குக்கும் வியாபாரிகள் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் அளவுக்கு அதிகமாகச் செயற்கைப் பசளைகளை பயன்படுத்தத் தூண்டுகின்றனர். இதனால் மண்வளம் அழிவடைகின்றது.

மாடி வீடுகளும், உயர எழும்பும் பல் அங்காடிக் கட்டிடங்களும் கல்லுடைப்பதை விரிவுபடுத்துகின்றன. கற்பாறைகள் அகழ்ந்தெடுக்கப்படுவதால் சூழல் பாதிப்படைகிறது.

அதிகரித்த போக்குவரத்துச் சாதனங்கள் வெளியிடும் புகை, தொழிற்சாலை களிலிருந்து வெளியேறும் புகை போன்றவற்றாலும் யுத்தங்களின் போது பயன்படுத்தப்படும் ஆயுதங்களினாலும் வளி மாசடைகின்றது. உலக நாடுகள் முழுவதும் இது பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. தொழிற்சாலை களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் குடிநீர்க் கிணறுகளில் கலந்து விடுகிறது. இதனால் குடிநீர் பாதிக்கப்படுகிறது. கழிவுநீர்கள் தேங்கி நிற்பதால் தொற்றுநோய்கள் ஏற்படுகிறது.


இன்று நகரங்களிலேயே தொழிற்சாலைகள் பலவும் அமைக்கப்படுகிறன. இதனால் மக்கள் நகரத்தை நோக்கிச் செல்கின்றனர். மக்கள்தொகைப் பெருக்கத்தால் நகரங்களில் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு சூழல் மாசடைவதனால் எமக்கு பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றை இல்லாமல் செய்வதற்கு சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தீவில் எங்கு சென்றாலும் இடங்கள் மனதிற்குகந்தனவாகவே காணப்படுகின்றது. ஆனால் பணம் சம்பாதிக்கும் நடவடிக்கைகளால் இவ்வாறான சூழல் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகிறது.

வளி மாசடைவதைக் குறைத்துக்கொள்வதற்காக மரம் நாட்டும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு அரசு தொடர்ந்து அனுமதி வழங்குகிறது. தொழிற்சாலைகளில் ஏற்படும் நச்சு வாயுக் கசிவினால் பல்லாயிரம் மக்கள் இறந்துமுள்ளனர்.

இத்தகைய அனர்த்தங்கள் நமது நாட்டிலும் ஏற்படாது தடுக்கவேண்டுமாயின் சூழலுக்குப் பாதிப்பை உண்டாக்கும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றைத் தடுத்திட முன்கூட்டியே நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சூழல் சுத்தம் பேணுதலே சுகவாழ்வுக்கு அடித்தளம் என்பதை உணர்ந்து செயற்படுவோமாக!



**நறுமிகா**
தரம் - 11
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# மனித வாழ்வில் மூட நம்பிக்கையின் பங்கு

அக்காலம் தொடக்கம் இக்காலம் வரை மனித வாழ்வில் மிகவும் பின்னிப் பிணைந்து வருவது மூடநம்பிக்கையாகும். இது உண்மைக்கு எதிரானதும், விஞ்ஞானத்திற்கு புறம்பானதுமாகக் காணப்படுகின்றது. நாம் எமது வாழ்வில் பின்பற்றிவரும் சில மூடநம்பிக்கைகளாவன பூனை குறுக்கறுத்தால் சகுனம் சரியில்லை, அம்மன் நோய், காவடி எடுத்தல், பலி கொடுத்தல், அலகு போடுதல், கிரகம் கூடாது, சூனியம், சாஸ்திரம் பார்த்தல், நேர்த்திக்கடன் வைத்தல்.

பூனை குறுக்கறுத்தால் சகுனம் சரியில்லை என்பர் அதாவது பயணம் செய்பவர்கள் பூனை குறுக்கறுத்தால் இண்டைக்கு போகக்கூடாது என்று சொல்லிவிட்டு பயணம் செல்லாது நின்றுவிடுவார்கள். ஏனென்றால் செல்லுகின்ற பயணம் தடையாகுமாம் என்பர். இதுவே அதிக பணம் செலவழிக்கும் விமானப் பிரயாணமாக இருந்தாலும் பயணத்தை நிறுத்துவார்களா?

அம்மன் நோய் என்பார். இது ஒரு பெரிய நோயாகும். இந் நோய் வந்தால் அவரை வேப்பம் பத்திரத்தில் படுக்கவைத்து அவர்கள் விரும்பிக் கேட்கின்ற உணவுப் பண்டங்களை வாங்கிக் கொடுப்பார்கள். கேட்டால் தெய்வம் சுகம் கொடுக்கும் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றனர். உரிய மருந்து கொடுக்கப்படாவிட்டால் மரணம் தான் நிகழும். மதகுருக்களே தங்களுக்கு நோய் வந்தால் வைத்தியசாலைக்குத்தான் போகிறார்கள்.

வளர்ந்த நாடுகளில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து சமூகம் முன்னே செல்லுகின்றது. எமது நாடுகளிலோ மூடநம்பிக்கை வளர்ச்சியடைந்து சமூகம் பின்னே செல்கின்றது.

ஏதாவது நோய் வந்தவுடன் தாம் காவடி எடுப்போம், அலகு போடுவோம் என இறைவனுக்கு நேர்ந்து வைக்கின்றனராம். ஆனால் தெய்வம் இதையெல்லாம் சொல்லுகிறதா? எனக்கு இவ்வாறு எல்லாம் செய் என்கின்றதா? தாங்களாகவே இவர்கள் செய்வதால் நோய் தீராது கூடிக்கொண்டே செல்லும்.


பலி கொடுத்தல் என்பது ஒருவர் தனது துன்பத்தின் நிமிர்த்தம் கடவுளுக்கு நேர்ந்து விடுவதாகும். அதன்படி ஆலயத்துக்குச் சென்று ஒரு மிருகத்தை

தலையை வெட்டி பலி கொடுக்கின்றனர். தமது தேவைக்காக இன்னொரு உயிரைப் பலியெடுக்கவும் தயங்கவில்லை.

சூனியம் சூனியம் என்று எமது உளம் பாதிக்கப்பட்டு நாங்களாகவே மனநோயாளியாகிறோம்.

திருமண பந்தத்தின் போது பல மூடநம்பிக்கைகள் வெளிக்காட்டப்படுகின்றது. நாள் பார்த்து திகதி பார்த்தவுடன் செவ்வாய் தோசம், சரியில்லை என்பர். அப்படியும் திருமணம் செய்தால் தாலி பாக்கியம் இல்லை என்று சமூகத்தில் ஒதுக்கி வைக்கின்றனர். இம் மூடநம்பிக்கையால் பெண்களின் வாழ்வுதான் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக காதலர்கள் நாள் பார்க்காது, சாஸ்திரம் பார்க்காது, மூடநம்பிக்கையை விட்டெறிந்து இருமனமும் ஒருமித்து சந்தோசமாக வாழ்வதை எங்கள் வாழ்க்கையில் நாம் பார்க்கின்றோம்.

ஆன்மாவை ஆணவ மலம் எவ்வாறு பிடித்திருக்கின்றதோ அதே போன்று மூடநம்பிக்கை சமுதாயத்தில் பிடிக்கப்பட்டுள்ளவையாக காணப்படுகின்றது. சமயத்திற்கு சமயம், மதத்திற்கு மதம், இனத்திற்கு இனம், கலாசாரத்திற்கு கலாசாரம் மூடநம்பிக்கை பற்றிப் பிடித்துள்ளது.



**ராதிகா**
தரம் - 11
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# நான் அன்றும் இன்றும்

சிறகடித்துப் பறக்கும் சின்ன வயதில்
சிறகு உடைந்து வாடினேன்.

அழகாய்ப் படிக்கும் சின்ன வயதில்
படிப்பை இழந்து அலைந்தேன்.

அம்மா அப்பா சொல்லைக் கேட்காமல்
ஆடுகள் மேய்த்துத் திரிந்தேன்.

முயல்கள் பிடிக்கக் காட்டுக்குச் சென்றேன்.
முருங்கைக் காய்களும் பறித்தேன்.

மாடுகள் மேய்த்து வெயிலில் வாடினேன்
காடுகள் எங்கும் ஓடினேன்.

மீன் பிடிக்கக் காட்டிற்குச் சென்றேன்.
மின்னல் அடிக்கப்பயந்தும் நடுங்கினேன்.

படிக்கவென்று முடிவெடுத்து இன்று
படிப்பை நன்றாய்த் தொடர்கின்றேனே.

**நிரஞ்சன்**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# கவனயீனம்

என்னுடைய குடும்பத்தில் ஐந்து பேர்கள். தங்கை, தம்பி, அப்பா, நான், மற்றும் அம்மா. எனது தங்கை களனி எனும் தோட்டத்தில் இருக்கிறாள்.

ஒருநாள் தங்கையைப் பார்க்க அம்மா, அப்பா, தம்பி எல்லோரும் அத் தோட்டத்துக்கு சென்றார்கள். அங்கு போன அம்மா மிக சந்தோசமாக இருந்தார். ஆனால் அந்த சந்தோசம் தான் என் அம்மாவின் கடைசிநாள் என்று தெரியாது.

அம்மா துணிகளைக் கழுவும் போது காலில் ஏதோ கடித்ததென்று தனது தாயிடம் சொல்ல, கட்டெறும்பு கடித்திருக்குமென்று சொல்லி சுண்ணாம்பு தடவி விட்டிருக்கிறார் எனது அம்மம்மா. திடீரென்று அம்மா மயக்கம் போட்டுக் கீழே விழ அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் இறந்து போய்விட்டார்.

வைத்தியர்களின் பரிசோதனையின் பின் தான் தெரிந்தது எனது அம்மாவை பாம்பு தீண்டியதென்று.

எனது அம்மா உண்மையாகவே இறந்துவிட்டார். நான் அழுதேன்.

என் தாயிடம் நான் சரியாக பேசமாட்டேன். முகத்தைப் பார்த்துக்கூட ஒழுங்காக பேசியதில்லை. இறந்த பிறகு என் தாயை நினைத்து இன்னும் கண்ணீர் வடிக்கிறேன். ஒரு கவனயீனத்தால் என் தாய் இறந்துவிட்டார்.

**சதீஸ்**
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# உடைந்த குடையின் சுயசரிதை

நான் இன்று வர்ணங்களெல்லாம் மங்கிய உடைந்த குடைக்குள் அடங்குகிறேன். இங்கு வரும் முன்னர் பலதரப்பட்ட மனிதர்களது அனுபவங்களையும் பெற்றிருக்கின்றேன். அவற்றை இப்போது மீண்டும் உங்களுக்குச் சொல்கின்றேன்.

நான் இலங்கை நாட்டில் பிறந்தேன். எனது உடலில் வர்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன. என்னைப் பார்ப்பவர்களின் கண்களுக்குப் பிரகாசமாகவும் அவர்களைக் கவரும் வகையிலும் நான் அமைந்திருந்ததால் சிலர் என்னை எப்போதும் தங்களுடன் வைத்துக்கொள்ள ஆசைப்பட்டனர்.

மட்டக்களப்பிற்கு என்னுடன் பலரும் வந்திறங்கிய போது எங்களைப் பார்த்து ஆசைப்பட்ட கடை முதலாளி ஒருவர் எங்களை மொத்தமாக விற்பனைக்காக வாங்கிக்கொண்டு சென்றார்.


அவர் எங்களை கொண்டுசென்று தனது கடையில் தொங்கவிட்டார். எங்களை ஒரு மனிதர் வாங்கி அவர் வீட்டிற்குக் கொண்டு சென்று தன் மனைவியிடம் கொடுத்தார். அவரது கண்ணைக் கவரும் வகையில் நான் அமைந்திருந்ததால் அவருடன் என்னை வைத்துக் கொண்டார்.

ஒருநாள் அவரது மகள் பாடசாலை செல்வதற்காக குடையைக் கேட்டார். அவர் என்னை எடுத்துக் கொடுத்தார். அவள் என்னை எடுத்துக்கொண்டு பாடசாலைக்குப் போய் வீட்டுக்கு திரும்பி வந்ததும் என்னை வீட்டு மூலைக்குள் எறிந்துவிட்டாள்.


நான் மூலைக்குள் கிடக்கையில் என்னை ஒரு சுண்டெலி கண்டுவிட்டது. கண்டது மட்டுமல்லாமல் என்னை நறுக்கியும் விட்டது. அதற்குப் பிறகு என்னைக் கவனிப்பார் யாருமில்லை. என்னைத் தூக்கிக் குப்பைத் தொட்டிக்குள் சில நாட்களில் எறிந்துவிட்டனர்.



**நளினி**
தரம் - 11,
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.


வேலை செய்யும் சிறுவனின் நினைவு
B. நவீன் குமார்
தரம் - 08
நாவலபிட்டிய.

என்னுடைய அனுபவத்தில் நான் தெரிந்துகொண்ட உண்மை ஒன்றை உங்களுக்கு கூறியிருக்கிறேன். நாம் எவ்வளவு காலம் வெளியில் சுற்றிக் கொண்டிருந்தோமோ அவ்வளவுக்கவ்வளவு பயன்பட்டோம்.





**சதீஸ்கரன்**

தரம் - 8

மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மட்டக்களப்பு (இலங்கை)

# THE CUP
# (யப்பான்)




இத் திரைப்படமானது திபேத்தின் துறவிகள் பயிலும் மடத்தை மையப்படுத்தியது. இங்கு ஏராளமான சிறுவர்கள் முதல் வாலிபர்கள் வரை பௌத்த துறவிகளாக இருக்கின்றனர். அந்த மடத்திற்கு பெரிய வயோதிப பௌத்த துறவி ஒருவர் தலைமை தாங்க இன்னொரு துறவி அதற்கு அடுத்த நிலையில் இருக்கின்றார்.

இளம் பௌத்த துறவிகள் காற்பந்தாட்டத்தில் ஆர்வமுள்ளவர்களாகவும் அதை பிரதி பலிக்கும் முகமாக, ஒருநாள் காலை வெளியில் பல்துலக்கியவண்ணம் "கொக்கோ கோலா" ரின் ஒன்றை காற்பந்தாக ஏந்தி விளையாடுவதும் அவ்விடத்திற்கு வரும் சிரேஷ்ட துறவியைக் கண்டவுடன் அவ்விளையாட்டை நிறுத்துவது மாக காட்சி அமைகின்றது.

இந்த உலகில் எந்த மதத்தை எடுத்துக்கொண்டாலும் சிறுவர்களை அவர்களின் அனுமதியின்றி போதகர்களாக உள்வாங்கிக் கொள்கின்றது. அவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் பெரும்பாலும் தாய், தந்தையை இழந்த அநாதையாகவோ அல்லது ஏழையாகவோ இருப்பது குறிப்பிடத்தக்கது. சிறுவர்கள் அவர்களின் வயதிற்கே உரித்தான ஆசைகளைக் கட்டுப்படுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவ்வாறான பல சம்பவங்களை மிகவும் யதார்த்தமாக இப்படமானது சொல்கிறது.

கால்பந்தாட்ட வீரர்களின் உருவப்படங்களை தங்கள் சுவரில் ஒட்டிவைப்பதும், வெளியில் செல்லும்போது விளையாட்டுத் தொடர்பான சஞ்சிகைகளை வாங்குவது மட்டுமன்றி இரவு நேரத்தில் பொறுப்பான துறவிகளுக்கும் தெரியாமல் தொலைக்காட்சியில் கால்பந்தாட்டப் போட்டி பார்க்க வெளியில் செல்வதும் குறிப்பிடத்தக்கது. இதற்காக இவர்கள் பல்வேறு விதமான

திட்டங்களை வகுப்பதும், அதற்காக குழு ஒற்றுமையாகச் செயற்படுவதும் இவர்களின் லௌகீக வாழ்க்கையின் சாதாரண விருப்பு வெறுப்புக்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

அன்றன்று நடைபெறும் சமய அனுஷ்டானங்களிலும், ஏனைய செயற்பாடு களிலும் குறிப்பிட்ட மடத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை விமர்சிக்கும் வகையில் இளம் துறவிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. மடத்தில் புதிதாக அவர்களின் பூரண சம்மதமின்றி கட்டாயத்தின் பெயரில் சேர்க்கப்படும் சிறு மற்றும் இளம் துறவிகளின் தலைமயிர் மொட்டையடிக்கப்படும் போது இனியில்லாத ஒரு சோகமயம் ஏற்படுகின்றது.

பெரும்பாலும் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களையே வளர்ந்தோர் களென ஏற்கக்கூடியதென்று கூறும் இந்த உலக சட்டங்கள் மதரீதியில் மட்டும் எவ்வாறு சிறார்களை சமய போதகர்களாக அவர்களின் முதிர்ச்சிப்பராய ஒப்புதலின்றி உள்வாங்க சம்மதிக்கின்றார்களோ தெரியவில்லை.

இருந்தபோதும் இப்படத்தில் சிறுதுறவிகளின் வேண்டுகோளுக்கிணங்க காற்பந்தாட்ட இறுதிப்போட்டியை பார்வையிட மடத்திற்கே தொலைக்காட்சி யை எடுத்துவர நிர்வாகம் அனுமதிப்பது சற்று ஆறுதலாக இருக்கின்றது.

பொதுவாக மதம் என்பது "அபின்" என்று ஓர் அறிஞரின் கூற்றாக அமைகின்றது. அவரவர் பக்குவம் எய்தியவுடன் மதம் தொடர்பான தமது சொந்தக் கருத்துக்களை உருவாக்குவதே நன்று என்பது எனது கருத்து. இதை இப்படத்தில் துல்லியமாகவும் பார்ப்போர் மனதை ஈர்ப்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

பௌத்த மதத்திற்குள் இருக்கும் ஜனநாயகப் பண்புகளையும், விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் அதன் சித்தாந்தங்களையும் சுட்டிக் காட்டுவதோடு இதனால்தான் இவ்வாறான ஒரு படைப்பை உருவாக்க முடிந்ததையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

**பிரபாத்**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# கல்வி

நான் பதினோராம் தரத்தில் கல்வி கற்கின்றேன். கடந்த ஒரு மாதமாக பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் இருந்துவிட்டேன். அயல் வீட்டு அண்ணாமார்கள் எல்லாம் நான் பாடசாலை போகும் பொழுது நன்றாக கதைப்பார்கள். பாடசாலைக்கு போகாமல் இருந்த பொழுது அனைவரும் எப்பொழுதும் ஏசிக்கொண்டே இருந்தார்கள்.

அம்மா எனக்காக வெளிநாட்டிலிருந்து படும் கஷ்டத்தைக் கூறினார்கள். என்னுடைய நண்பன் ஒருவன் படிக்காமல் வேலைக்குச் சென்று ஒரு வருட காலமாக பட்ட கஷ்டத்தையும், முதலாளியிடம் ஏச்சுவாங்கியதையும் கூறினான். இதையெல்லாம் கேட்ட நான் நன்கு யோசித்து மீண்டும் பாடசாலைக்குச் செல்லத் தீர்மானித்தேன். இனிவரும் காலங்களில் இவ்வாறு விலகக்கூடாது என்று திட்டம் தீட்டியுள்ளேன்.

என் சக மலையக நண்பர்களுக்கு கூறுவது என்னவென்றால், நீங்களும் பாடசாலையில் தொடர்ந்து கல்வியைக் கற்று எதிர்காலத்தில் மலையக லட்சியவாதிகளாக வர முயற்சி செய்யுங்கள். கல்வி ஒன்றே நம் சமூக மீட்பின் விடிவெள்ளி. எமது முதலாவது தெரிவும் கல்வியாகட்டும்! எமது இரண்டாவது தெரிவும் கல்வியாகட்டும்! எமது மூன்றாவது தெரிவும் கல்வியாகட்டும்!




**சிவகுமார்**
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# நான் ஆசிரியரனால்....

நான் பிள்ளைகளுக்கு நன்றாக படிப்பிப்பேன்.
நான் நேரம் பிந்தாமல் பாடசாலைக்கு வருவேன்.
நான் தினமும் பாடசாலைக்கு வருவேன்.
நான் பிள்ளைகளுக்குச் சரிசமமாகப் படிப்பிப்பேன்
நான் மாணவர்களுக்கு எல்லா விடயத்தையும் கற்றுக் கொடுப்பேன்.
பிள்ளைகளை நன்றாகக் கவனிப்பேன்.
பிள்ளைகள் தவறு செய்தால் தண்டிக்காமல் அதைத் திருத்த முயற்சிப்பேன்.



**சுகாந்தனி, ருக்சி**

தரம் – 6, 7

கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி

(இலங்கை)

# Winky's Horse
## (நெதர்லாந்து)




சீனாவில் இருந்து ஒரு சிறிய சிறுமியான விங்கியின் குடும்பம் நெதர்லாந்திற்கு வந்தது. அந்தப் பிள்ளையின் வயது 06. அச்சிறுமி நன்றாகப் பாடும். அந்தப் பிள்ளை பாடசாலையில் படித்துக்கொண்டே அவளது தந்தையின் உணவகத்திலும் அனைத்து வேலைகளையும் செய்தது.

இப்பிள்ளைக்கு அவளுடைய அப்பா, அம்மா ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்தார்கள். விங்கிக்கு சைக்கிள் ஓட அவளுடைய அப்பா கற்றுக் கொடுத்தார். அச் சைக்கிளில் அவளுடைய அம்மா பிள்ளையை பாடசாலைக்கு கொண்டு சென்றாள்.

அவள் பாடசாலையில் சக மாணவர்கள் விளையாடுவதை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருப்பாள். ஒருநாள் அவள் பாடசாலைவிட்டு வரும்போது ஒரு குதிரையைக் கண்டாள். அந்தப் பிள்ளை குதிரையில் செல்வதற்கு மிகவும் ஆசைப்பட்டாள். அவள் தனது பாடசாலைக்குச் செல்லும்போது அங்கு நிற்கும் குதிரைகளைப் பார்த்து அதனை தனது கையினால் தொட்டுப் பார்த்து சந்தோசப்படுவாள். இவள் பாடசாலையிலும் கூட குதிரையின் படங்களை வரைந்துகொண்டே இருப்பாள்.

அடுத்தநாள் தனது வீட்டில் இருந்து பாடசாலைக்குச் செல்லும்போது அந்தப் பிள்ளைக்கு குதிரையின் ஞாபகம் வந்து, அந்தக் குதிரைக்கு கரட் எடுத்துச் சென்றது.

அங்கு சென்று அந்தக் குதிரைக்கு கரட்டை தனது கையில் வைத்து உண்பதற்கு அந்தச் சிறுமி கொடுத்தாள். அதன்பின் அந்தச் சிறுமி தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லும்போது ஒவ்வொருநாளும் குதிரையைத் தொட்டுப்பார்த்து அந்தக் குதிரைக்கு முத்தம் இட்டுச் செல்வாள்.

ஒருநாள் குதிரையை வைத்திருக்கும் அந்த மனிதர் வந்தார். அப்போது அந்த மனிதர் அந்தக் குதிரையைக் கூப்பிட்டபோது அந்தக் குதிரை அந்தச் சிறுமியை விட்டு விலகிப் போகவில்லை. ஒருநாள் அந்தச் சிறுமியை ஒரு அக்கா கூட்டிச் செல்லும்போது அந்தப் பிள்ளை அந்தக் குதிரையைப் பார்க்கும்போது அந்தக் குதிரையும் அந்தச்சிறுமியைப் பார்த்தது.

அதன் பின்னர் அந்தப்பிள்ளைக்கு குதிரையில் ஏறிச்செல்வதற்கு ஆசையாக இருந்தது. அங்கு இருந்த பெரியவர் அந்தச்சிறுமி ஆசைப்பட்டதை உணர்ந்து அவரிடம் இருந்த குதிரையை அந்தச்சிறுமிக்கு கொடுத்தார். அப்போது அந்தச்சிறுமியின் தாயும் வெளிநாட்டிலிருந்து வந்தார். இரட்டை மகிழ்ச்சி அந்தப்பிள்ளைக்கு. அந்தக் குதிரையைக் கொடுக்கும்போது பாதர் அந்தப் பிள்ளையிடம் உன் கண்ணை ஒருமுறை மூடித்திற என்று சொன்னார். அப்போது அந்தப் பிள்ளை கண்ணைத் திறந்தவுடன் அந்தப் பிள்ளைக்கு முன்னால் ஒரு குதிரை நின்றது. அந்தப் பிள்ளை அதன்பின் குதிரையில் ஏறிச்சென்றாள்.



**கிரிஜா, தனிஸ்கா, .மிதுசன்,**
**யுகதர்சினி, கிருஜனன், தபோதரன்,**
தரம் - 9, 10
அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# காமன் கூத்தில் கதாநாயகியாக நான்.......

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கூலியாளர்களாக அழைத்துவரப்பட்ட எம்மவர்கள் தம்முடன் தமது கலைகளையும் கொண்டு வந்தார்கள். அதில் ஒன்றான காமன் கூத்து அரும் பொக்கிஷமாகும்.

காமன்கூத்தில் முக்கிய கதாபாத்திரமான ரதி வேடத்தில் நான் நடித்தேன். இந் நிகழ்ச்சியானது கடந்த வருடம் எமது அதிபரால் பயிற்றுவிக்கப்பட்டது. ரதியாக நான் நடித்ததை நினைத்து பெருமைப்படுன்கிறேன். இந்நிகழ்ச்சியில் காமன் கூத்துப் பற்றி தெளிவான அறிவைப் பெற்றுக்கொண்டேன்.

இவ் வேடத்தில் நடனம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உண்மையைக் கூற வேண்டுமாயின் ஆரம்பத்தில் இந்தக் கதாபாத்திரத்தில் நடிக்கக் கொஞ்சம் கூட விருப்பமில்லை. எனக்கு மட்டுமல்ல எனது குடும்பத்துக்கும் கூட.


காமன் கூத்தைப் பற்றி தெளிவான விளக்கத்தைக் கூறியபின் நான்தான் கட்டாயம் ரதியாக வேடம் கட்டவேண்டுமென்று முடிவெடுத்தேன். அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி அளித்தார்கள். மேலும் ரதியாக நான் அலங்கரிக்கப்பட்ட பின் புதுவிதமாகக் காட்சியளித்தேன்.

இன்றும் என்மனதில் நீங்காத ஒரு நினைவாக காமன் கூத்தின் பாத்திரம் இருக்கிறது. இது தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும்.

**தர்சிகா**
தரம் - 10
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)



**பிரசாத்**
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.


எங்கே நிம்மதி
ப.றோசானி
வயது - 13
மட்/கொல்லநுலை
விவேகானந்த வித்தியாலயம்

# நம்பிக்கை

இவள் மிகவும் பின்தங்கிய தோட்டமான கந்தலோயாவில் வசிக்கின்றாள். பெற்றோர் தோட்டத்தொழிலாளிகள். குடும்பத்தில் அப்பா, அம்மா, அக்கா, அண்ணா இவளும் மாத்திரமே.

அண்ணா க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தார். அக்காவும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்தாள். ஆனாலும் தொடர்ந்து படிக்க முடியாமல் வீட்டின் வறுமை காரணமாக இருவரும் தொழில் தேடிச் சென்றுவிட்டனர்.

இவள் க–கிறின்வூட் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த சாதாரண தர பரீட்சையை எழுதினாள். பரீட்சைப் பெறுபேறுகள் வந்தன. அதில் இவள் சித்தியடையவில்லை. இவளின் தந்தை "மீண்டும் படிக்கும் படி" கூறினார். அதனை கேட்டு இவள் முதலில் மறுத்தாலும் பிறகு ஒத்துக் கொண்டாள்.

இவளின் உறவினர்கள் வேலைக்குப் போகாமல் எதற்குப் படிப்பு என்று இவளைத் திட்டத் தொடங்கினார்கள். அவர்களின் வார்த்தை இவளைக் கவலையடையச் செய்தது. இவ்வாறான செயல்கள் இவளை ஒருநாள் சாகவும் தூண்டியது. இருந்தும் இவளின் அப்பா இவள் மீது நம்பிக்கை வைத்திருந்தார். அதனை இல்லாதொழிக்க அவள் விரும்பவில்லை.

தற்போது இவள் கந்தலோயா பாடசாலையில் 2ஆம் முறை பரீட்சை எழுத படித்துக்கொண்டிருக்கிறாள். கந்தலோயா பாடசாலையில் அனைத்துப் பாடங்களையும் மீட்டல் பயிற்சி செய்வதனால் இவளுக்கு மிகவும் இலகுவாக உள்ளது. இவளுக்கு நம்பிக்கை உள்ளது இந்த ஆண்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைவேனென்று. அந்த இவள் வேறுயாருமில்லை. நான் தான்.

**தர்சினி**
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# எனது பூனைக்குட்டி



எனது பூனைக்குட்டியின் பெயர் டொமி.
எனது பூனைக்குட்டி எலி பிடிக்கும்.
எனது பூனைக்குட்டியைத் தூக்கி வளர்ப்பேன்.
எனது பூனைக்குட்டி என்மேல் பாசம் வைத்துள்ளது
எனது பூனைக்குட்டி மேல் நான் விருப்பம் வைத்துள்ளேன்.

**தயாரசினி**
தரம் - 6
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# நான் ஆசிரியரானால்...

நான் ஆசிரியரானால் கல்விகற்ற பாடசாலைக்கும், எனக்கு கல்வி கற்றுத்தந்த ஆசிரியர்களுக்கும் நன்றிக்கடன் செலுத்தும் முகமாக என்னுடைய மாணவர்களுக்கு சேவை செய்வேன்.

நான் கல்விகற்கும் போது இருந்த என் தற்போதைய மலையகத்தை மாற்றி அமைப்பதற்கும், சிறந்த மாணவர்கள் உருவாகுவதற்கும், உதவி செய்வேன்.

என் கல்வி அறிவினை வருங்காலத் தலைமுறை உபயோகிக்கும் வகையில் சேவை செய்வேன். என் மலையக மாணவர்கள் எல்லாத் துறையிலும் சிறந்து விளங்க அவர்களை ஊக்குவிப்பேன்.

எக்காரணத்திலும் தோல்வி கண்டு கலங்கவிடாமல் ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு வெற்றிக்கு வழி என அவர்களுக்கு புரியச்செய்வேன். எந்தச் சூழ்நிலையிலும் கல்வியை விட்டு விலக அவர்களை விடமாட்டேன். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர வைப்பேன்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்பதனைப் புரியவைப்பேன். ஏழையாகப் பிறந்தும் மலையகத்தில் வாழ்ந்து கல்விகற்று வாழ்வில் முன்னேறிய ஒவ்வொருவரின் கதைகளையும் சொல்லி அவர்களுக்கு கல்வியில் ஆர்வத்தை ஏற்படச்செய்வேன்.

நான் செய்யும் சேவை சிறிது காலமானாலும் அக்காலத்தில் என் மலையக மாணவர்களை நகர்ப்புற மாணவர்களிலும் பார்க்க கல்வித்துறையில் உயர்த்துவேன். அதற்கு அயராது முயற்சி செய்வேன்.

குரு என்பவர்கள் மாணவர்களுக்கு ஒளி ஏற்றும் ஞான தீபங்கள் என்ற கூற்றினை என் சேவைக் காலத்தில் என்னால் முடிந்தவரை நிரூபிக்க முயற்சி செய்வேன். ஒவ்வொரு வேதனைக்குப் பின்னும் சாதனைகள் உண்டு என்பதை உணரச்செய்வேன்.

**துசாந்தினி**
தரம் - 7
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# உடைந்த கதிரையின் சுயசரிதை


நான் இப்பொழுது ஓர் இருட்டு அறைக்குள் தூசி பிடித்துக் கிடக்கின்றேன். நான் இவ்வாறு கிடப்பதற்கான எனது வாழ்க்கை வரலாற்றினை உங்களுக்குக் கூறுகின்றேன்.

நான் நவீன இறப்பரினால் பலாங்கொடையில் வடிவமைக்கப்பட்டேன். பின்பு என்னை வியாபாரத்திற்காக ஒரு வியாபாரி மட்டக்களப்பிற்கு எடுத்துவந்தார். என்னை அழகாக கடை முன்னே தொங்கவிட்டார். நான் மண்ணிற வர்ணத்தினால் அழகு படுத்தப்பட்டிருந்தேன். அத்தோடு பூ வடிவங்களாலும் வடிவமைக்கப்பட்டிருந்தேன். அதனால் பலர் கண்களிலும் கவரப்பட்டேன். என்னை ஒருவர் தனது மகளின் பிறந்த நாளுக்கு பரிசாகக் கொடுப்பதற்காக 750 ரூபாய் கொடுத்து வாங்கி வந்தார். மறுநாள் தனது மகளின் பிறந்த நாள் கேக் வெட்டும் போது என்னில் வைத்தே கேக் வெட்டினார்கள். பின்பு என்னையும் அவரது மகளையும் பல புகைப்படங்கள் எடுத்தார்கள். அன்றிலிருந்து நான் அவ் வீட்டில் ஓர் கைக்குழந்தை போல் பயன்படுத்தப்பட்டேன்.

அச்சிறுமி என்னை எங்கு போனாலும் தன் கூட தூக்கிச்சென்று என்கூடத்தான் இருப்பாள். அவள் சாப்பிடும்போதும், படிக்கும் போதும், வேறு வேறு வேலையில் ஈடுபடும் போதும் விளையாட்டுப்பொருளாகக் கையாண்டாள். அவள் பாடசாலை சென்ற பின்பு தான் நான் தனிமையில் இருப்பேன். அப்போது கூட என்னை பாதுகாப்பாக ஓர் அறைக்குள் வைத்து விட்டுத்தான் செல்வாள். பாடசாலை விட்டு வந்ததும் என்னை தன்னுடன் கொண்டு செல்வாள். எனக்கு செல்லமாக "டோண்" என்று தான் சொல்லி தூக்கிச் செல்வாள்.

இவ்வாறாக எனது வாழ்நாட்கள் சந்தோஷமாகக் கழிந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் அவ்வீட்டு அம்மா வீட்டைச்சுத்தம் செய்யும் போது என்னை ஒரு தென்னை மர நிழலின் கீழ் வைத்துச் சென்றார். மறுகணம் என் மீது ஒரு தேங்காய் " தொப் " என்ற ஓசையுடன் விழுந்ததும் நான் பல துண்டுகளாக உடைந்து சிதறிக்கிடந்தேன். என்னைப் பாவனைக்குப் பயன்படுத்த முடியாது

போக என்னைப்போல் வேறொரு கதிரையை வாங்கிக் கொடுத்தார்கள். அப்போது என்னை தூசி பிடித்துக் கிடந்த அறைக்குள் உடைந்த பொருட்களுடன் தூக்கி வீசினார்கள். அன்றிலிருந்து இன்றுவரை நான் உடைந்துபோய் கிடக்கின்றேன். என் மீது தூசிகள் புழுதிகள் இன்னும் வேறு வேறு உடைந்த பொருட்கள் எல்லாம் கிடக்கின்றன. இது தான் எனது வாழ்க்கை வரலாறு.



**உசாளினி**
தரம் - 7
மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மட்டக்களப்பு
(இலங்கை)

# பல தடைகளுக்குப் பிறகு எனது கல்வி

நான் கந்தலோயா எனும் தோட்டத்தில் வசிக்கின்றேன். அதே ஊரில் உள்ள கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்றிலிருந்து க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடியும்வரை படித்தேன்.

எனக்கு அம்மா, பாட்டி, மற்றும் தாத்தாவும் இருக்கின்றார்கள். நான் சிறு வயதாக இருக்கும் போதே எனது தந்தை எங்களை விட்டுச் சென்றுவிட்டார். தற்போது எனது அம்மா கொழும்பில் ஒரு வீட்டில் வேலை செய்து என்னையும் பாட்டி, மற்றும் தாத்தாவையும் பார்த்துக்கொள்கின்றார்.

நான் படிக்கும் போது காதலித்தேன். எனது காதலை எனது சமூகத்தினர் எதிர்த்தனர். அதனால் என்னை பாடசாலையில் இருந்து நீக்கச் சொன்னார்கள். அது மட்டுமில்லாமல் எனது நண்பிகளைக் கூட என்னுடன் சேர வேண்டாம் என்றார்கள். என்னை எல்லோரும் ஒதுக்கிய போதும் எனது அம்மாவும், பாட்டியும் என்னை ஆதரிக்கத் தவறவில்லை. என்னை நம்பிக்கையுடன் பாடசாலைக்கு அனுப்பிவைத்தார்கள்.

பாடசாலையில் எனது வகுப்பாசிரியர் அதிபரிருடன் கலந்துரையாடி அவ்வளவு பிரச்சினைகள் மத்தியிலும் எனக்கு நம்பிக்கையை ஊட்டி படிப்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். நானும் எவ்வளவு பிரச்சினைகள் வந்தபோதும் கல்வி கற்கவேண்டும் என்ற நோக்கத்தில் உறுதியாக இருந்தேன். அதைப்போல் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு இருந்த இறுதி 3 மாதங்களையும் நன்கு பயன்படுத்திக்கொண்டேன். பரீட்சையில் சித்தியடைந்தேன்.

தற்போது நான் க.பொ.த. உயர்தரம் படிக்க செல்லப் போகின்றேன். நிச்சயம் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்வேன். அதுவரை என் காதல் காத்திருக்கும்.

**வசந்தகுமாரி**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# நான்

நான் கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கிறேன். எனது அம்மா தோட்டத் தொழிலாளி. எனது அப்பாவும் ஒரு தோட்டத் தொழிலாளி தான்.

என் அம்மா காலையில் வேலைக்குச் சென்று மதியம் 3.00 மணிக்குத்தான் திரும்பி வருவார். எனது அப்பாவோ மாலை 5.00 மணிக்குத்தான் வீடு திரும்புவார். வரும்பொழுது மிகவும் சோகமாக வருவார்.

இதற்கெல்லாம் ஒரு விடிவு வர நான் நன்றாகப் படித்து எனது மலையகத்திற்கே அதுவும் நான் கல்விகற்கும் பாடசாலைக்கே ஒரு தமிழ் ஆசிரியராக வருவேன். அதிலும் எனது மலையகத்திற்கே சிறந்த ஆசிரியர்களையும், உன்னத வைத்தியரையும் உருவாக்குவேன். இது எனது வருங்கால இலட்சியம் மட்டுமல்ல எனது பெற்றோரின் ஆசையும்கூட.

**ஜதுசா**
தரம் - 9
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# TWO WOMEN
## (ஈரான்)





தமிழ் சினிமா என்றவுடனே எமக்கு நினைவுக்கு வருவது பாடல், நகைச்சுவை, கதாநாயகன், கதாநாயகியின் காதல், வில்லனின் செயற்பாடுகள் என்பவைதான். ஆனால் இந்த ஈரானியத்திரைப்படம் முற்றிலும் வேறுபட்டதாக காணப்பட்டது.


இத்திரைப்படம் இரண்டு பெண்களின் வாழ்க்கையைப் பற்றியதாகும். இதில் ஒரு பெண்ணுக்கு முற்போக்காகச் சிந்திக்கக் கூடிய கணவன் கிடைக்கின்றான். ஆனால் மற்றைய பெண்ணுக்கு அதற்கு மாறான ஆணாதிக்கமுடைய கணவன் கிடைக் கின்றான். முற்போக்குச் சிந்தனை யுடைய மனைவிக்கு ஒரு சந்தோசமான வாழ்க்கை கிடைக்கின்றது. மற்றைய பெண்ணுக்கோ ஒரு துன்பகரமான வாழ்க்கை கிடைக்கின்றது.

பெண் என்றாலே அவள் ஒரு பிள்ளை பெற்றுக் கொடுக்கும் இயந்திரம் என்று நினைக்கும் ஆண் சமூகத்தை உரித்துக் காட்டுகிறார்கள். ஒரு பெண் தன்னுடைய ஒரு குழந்தையைக் கையில் ஏந்தியவண்ணம் கண்ணாடி முன்னே இருக்கையில், அக் குழந்தையை கணவன் வாங்கிக்கொள்ள, இவள் மேலும் ஒரு குழந்தைக்குத் தாயாவதை இவளின் வயிறு கண்ணாடி விம்பத்தில் காட்சி தருகின்ற தருணமும், அவள் தன் வயிற்றை கண்ணாடியில் பார்க்கின்ற அந்தக் காட்சியும், ஆண் சமுதாயத்தைப் பெண்கள் தொடர்பான தங்கள் பார்வையை மீள்பரிசீலனைக்கு உட்படுத்துங்கள் என்று கூறுவது போலுள்ளது.

இவ்வாறான ஒரு சம்பவத்தை தத்துரூபமாகவும், மனதுக்கு வலியை ஏற்படுத்தக்கூடியதாகவும் என் அறிவுக்கெட்டிய வகையில் நான் எந்தவொரு தமிழ் சினிமாவிலும் பார்க்கவில்லை. பெண்கள் என்றால் வெறுமனே




**பவதரணி**
தரம் - 9
கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.



எங்கள் வாழ்வும் எங்கள் மலையகமே
பி. ரசிகா
தரம் 08

பாலியல் பொருளாக காண்பிக்கும் நமது சினிமாவும், அதைப் பார்த்து கும்மாளம் அடிக்கும் இளைஞர்களும் கட்டாயம் TWO WOMEN என்ற ஈரானியத் திரைப்படத்தை பார்த்தே ஆகவேண்டும்.



**அனுசா**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# போய் வாம்மா நீ பள்ளிக்கு

கண்ணே நீயேன் அழுகின்றாய்
கண்ணீர் முத்தை உதிர்க்கின்றாய்
மண்ணில் நீயோர் மேதையாக
மலர்ந்திட வேண்டும் அழலாமா

படித்தால் தானே நாளைக்கு
பண்பாய் உயர்ந்து வாழ்ந்திடலாம்
படிக்க வேண்டிய காலத்திலே
படியாதிருப்பது முறையில்லை

உனது திருவாய் மொழி கேட்டு
உள்ளம் மயங்கிப் போனோமே
கனகாம்பரமே தாமரையே
கல்விக் கூடம் போய் வாம்மா

பிஞ்சு நிலவே உன் வாயால்
பேசும் யாழிசை கேட்டன்றி
பேசும் கிளியே அகல் விளக்கே
கோமதமே நீ போய் வாம்மா

ஊற்றுத் தண்ணீர் போற் கல்வி
உனக்குக் கிடைக்க வேண்டுமே
கீற்றுப் பிறையே உன் ஞானம்
கேட்டு மகிழ்வதெப்போது

படியாதவர்கள் வாழ்க்கையிலே
ஏமாறும் துன்பம் எத்தனையோ
முடியும் எல்லாம் உன்னாலே
முயன்று படித்துக் கொள்ளம்மா

பெண்ணுக்கு அழகு கல்விதான்
பேசும் சிலையே படித்துக்கொள்
எண்ணும் எழுத்தும் நம் கண்கள்
எழுந்து நீ மகளே போய் வாம்மா

**புவனலோஜினி**
தரம் - 9
மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மட்டக்களப்பு
(இலங்கை)

# The Cave of The Yellow Dog
## (மொங்கோலியா)




இப் படமானது ஒரு ஏழைச் சிறுமியின் வாழ்க்கை வரலாற்றை அழகாக எடுத்து இயம்புகின்றது. இதில் காட்டப்படும் இச் சிறுமியின் குடும்பமானது நாடோடிகளாகவும், செம்மறி ஆடு மேய்த்து வாழ்வை நடத்துபவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். நாடோடிகளாக இருந்த போதிலும் தமது வாழ்க்கை நடவடிக்கைகளை முயற்சியுடனும் திருப்தியுடனும் மேற்கொள்கின்றனர்.

அவர்கள் செம்மறியாட்டின் மூலம் பலவிதமான நன்மைகளைப் பெறுகின்றனர். இதன் பாலை உணவாகவும், இதனை வடிகட்டி இனிப்பாகவும், இதன் மூலம் போக்குவரத்து செய்யவும் அதுமட்டுமின்றி தாம் வாழும் கூடாரம் அமைக்கவும் செம்மறியாட்டினைப் பயன்படுத்திக் கொண்டனர். இச் சிறுமியே செம்மறியாட்டின் சாணத்தைக் காய வைத்து அடுப்பின் விறகாகவும் பயன்படுத்துவாள். இச்சிறுமிக்கு இரு சகோதரங்கள். ஒன்று தங்கை, மற்றையது தம்பி.

தினமும் சாணம் எடுக்கச்சென்று திரும்புவது போல் அன்றும் சாணத்தை தன்னால் இயன்றளவு முயற்சியுடன் எடுத்துக் கொண்டு திரும்பும் வழியில் ஒரு இருண்ட குகையினைக் கண்டாள். அவ்விருண்ட குகையில் ஒரு அழகிய வெண்ணிற நாயைக் கண்டு மனம் நெகிழ்ந்து அதன் மீது தீராத அன்பு கொண்டாள். அதனை எடுத்துக் கொண்டு தனது வீட்டிற்கு வந்தாள்.

ஆனால் அவளின் தந்தை மாத்திரம் பிராணிகள் மீது அன்பில்லாதவர். அந் நாயை அவளிடமிருந்து எடுத்துக் கட்டிப்போட்டார். பின் செம்மறியாட்டின் தோலை விற்பதற்காக சந்தைக்குச் சென்றார். அப்போது அச்சிறுமி நாயைக் கட்டிலிருந்து அவிழ்த்து எடுத்து வந்து தன் சகோதரர்களுடன் இணைந்து விளையாடினாள். பிராணிகளின் வளர்ப்பில் ஈடுபாடுகாட்டாத தன் தந்தை வருவதைக் கண்டதும் அதனை ஒரு கூடையில் வைத்து மூடிவிட்டாள்.

அவளின் தந்தை அனைவருக்கும் இனிப்புக்களைக் கொடுத்தார். பின் அவளுக்கொரு பொம்மையிலான நாயையும் கொடுத்தார். அவள் அதனைக் கொண்டு விளையாடினாள். அதன் சத்தத்தைக் கேட்டு ஒளித்து வைத்த நாய் மேலே எழுந்து ஓடி வந்தது. அதனைக் கண்ட அவளின் தந்தை நாயை மீண்டும் கட்டிவைத்தார்.

மிகவும் மனம் கரைந்த அச்சிறுமி அந் நாயைத் தந்தைக்குத் தெரியாமல் தினமும் பார்த்து வந்தாள். சில நாட்களின் பின் அவர்கள் அனைவரும் தாங்கள் இருந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு செல்வதற்காக ஆயத்தமாகினர். கூடாரத்தைப் பிரித்துக் கொண்டு சென்றுகொண்டிருந்த போது அவர்களின் குழந்தையைக் காணவில்லை என்பதை அறிந்து அனைவரும் கலங்கினர். பின் தாங்கள் முதலிருந்த இடத்திற்கு சென்ற போது அங்கே அவர் கட்டி வைத்திருந்த நாயே கழுகுகளிடமிருந்து தன் மகளைக் காப்பாற்றியது என்பதை அறிந்த அவர் தான் செய்ததை நினைத்து மிகவும் கவலைப்பட்டார்.

பின்னர் குழந்தையையும் அந்த நாயையும் அழைத்துக்கொண்டு சென்றார். அதைக் கண்ட அனைவரும் மகிழ்ந்தனர். மகிழ்ச்சியாக அனைவரும் இணைந்து தங்கள் வாழ்வைக் கழித்தனர்.

இப்படம் மிகவும் சுவாரஸ்யமாகவும் கருத்துச்செறிவு மிகுந்ததாகவும் அமைந்துள்ளது. அச்சிறுமியின் ஊக்கமும் அவள் பிராணிகள் மீது கொண்ட அன்பும் இக்கதையை பார்ப்பவர்களுக்கு ஒரு ஊக்குவிப்பை அளிக்கிறது. பிராணிகள் மீது அன்பு காட்டவேண்டிய அவசியத்தையும் அதன் மூலம் பெறும் நன்மைகளையும் இப்படம் விளக்கி நிற்கின்றது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

இச்சிறுமியின் தந்தை தன்பிள்ளைகள் மீது கொண்ட அன்புபோல் பிராணிகள் மீதும் அன்பு கொண்டு பிள்ளைகளின் ஆசைகளை நிராகரிக்காமல் அவர்களின் விருப்பத்திற்கு இசைந்து நடந்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

நாடோடியாக வாழ்பவர்களின் நம்பிக்கைகள், கலாச்சாரங்களையும், அவர்களும் மகிழ்ச்சியாகத்தான் வாழ்கின்றனர் என்பதையும் இப்படத்தின் மூலம் அறிந்துகொண்டேன். அந்தச் சிறுமியின் ஜீவகாருண்யம், சகோதரங்கள் மேல் கொண்ட அன்பு, அம்மாவின் வேலைகளில் பங்கெடுத்தமை, தனியே சென்று எரிப்பதற்கு தேவையான செம்மறியாட்டுச் சாணத்தை எடுத்து வருகின்றமை இவ்வளவு விடயமும் அச்சிறுமியின் வயதிற்கு ஏற்றதல்ல. இருந்தபோதும் சிறுமியின் ஆற்றல், சிறுபக்குவம், முயற்சி, அறிவு என்பவற்றைப் பயன்படுத்தி செய்தமை என்பது அதிசயிக்கத்தக்கது.

அச்சிறுமியின் நடிப்பு யதார்த்தத்திற்கு மாறாக அமையாமல் உண்மையான நடிப்புடன் காணப்படுகின்றது. அவளின் தைரியம், உயிர்கள் மீது அவள் கொண்டுள்ள அன்பு என்பன பார்ப்போரை வியக்கவைக்கக்கூடியது. அத்துடன் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு பின்னணி இசையை வழங்கியமை அப்படத்தினை மேலும் மெருகூட்டுகின்றது. அந்தச் சிறுமியின் சகோதரனாக வரும் அந்தக் குட்டிக் குழந்தையின் ஒவ்வொரு அசைவும் பார்ப்போர் அனைவரது உள்ளத்தையும் திகைக்க வைத்துவிட்டது.

**வேணுஜா, தினேஸ்ராஜ், விஜயன், லதா, யாழினி, தவனீதா, வினிதா, டிலோ, வினோதா, கவிப்பிரியா, அகல்யா, வாகீசன், துனேஸ்ராஜ், யோதினி, மிராழினி, பிரசன்னன், கிருஷன், நிதர்ஷனா,போஜினி, மோட்சசங்கரி, நவதாரணி, சாம் ஜெயராஜ், கௌதமி**

தரம் - 10, 11

முதலைக்குடா மகாவித்தியாலயம், மட்டக்களப்பு

(இலங்கை)

# மலையகச் சிறுவனும் நகரச் சிறுவனும்

ஒருநாள் மலையகச் சிறுவன் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது அங்கு வந்த நகரச் சிறுவன் அவனைப் பார்த்து முதலாம் தவணையில் நானே சித்திபெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முதலிடத்தை பெறுவேன் என்று கூறினான். மலையகச் சிறுவன் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு பாடசாலைக்குப் போய்விட்டான்.

முதலாம் தவணையில் மலையகச் சிறுவன் முதலாம் இடத்தைப் பெற்றான். அதைப் பார்த்த நகர சிறுவனுக்கு கோபம் கோபமாக வந்தது. அவன் ஆசிரியரிடம் சென்று பணம் கொடுத்து எனக்கு முதல் இடத்தை தாருங்கள் என்று கூறினான்.

பணப்பேராசையால் ஆசிரியர் நகர மாணவனையே முதலாவதாக்கினார். அதைப் பார்த்த மலையகச் சிறுவன் ஆசிரியரிடம் சென்று ஏன் இந்த முடிவிற்கு வந்தீர்கள் என்று கேட்டான். அதைக் கேட்ட ஆசிரியர் அவன் கன்னத்தில் படார் என்று அறைந்து விட்டார். அவன் அழுது கொண்டு வீட்டை நோக்கிப் போனான்.

இத்துடன் வன்முறை தொடரும்.

**ஜினோதன்**
தரம் - 8
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# நான் இறந்தபின்
# என் கல்லறையில் எழுதுங்கள்

**மலர்வு 1999.09.18 உதிர்வு 2052.03.17**

இவளின் பிறப்பு முதல் இறப்புவரை மலையகத்தை முன்னேற்றும் குறிக்கோள் உடையவள்.


இவள் நடனம், இசை, கவிதை, சிறுகதை போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றவள்.

இவளிடம் சிறிது நேரம் பேசினால் இவளின் வார்த்தைகள் முழுவதும் மலையகத்தைப் பற்றியே இருக்கும்.


இவள் "மலையகப் பிரச்சினை" என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை வெளியிட்டவள்.

இவள் என்றும் எங்கள் மனதில் இருப்பவள்.

**கௌத்தமி**
தரம் - 10
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)




**துஷந்தினி**
தரம் - 7
கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.



F. விஜித்ரா
தரம்.
கே/தெஹி/கந்தலோ
யா தமிழ்
வித்தியாலயம்

# கல்வி

பள்ளமுள்ள இடம் நோக்கி
வெள்ளம் பாய்ந்து வருவது போல
முயற்சியுள்ள சிறுவர் தேடி
தானாக கல்வி வரும்

வாழ்க்கைக் காலங்களிலே
மகிழ்வான பருவமென்றால்
மாணவராய் இருக்கும் நேரமே

இன்றைய சிறுவர்கள்
நாளைய தலைவர்கள்
இதற்கு அடிப்படை
நாம் கற்கும் கல்வி



ஆரம்பத்தில் ஒருவர்
அவரைப் பின்பற்றி ஊர்
ஊரைப் பின்பற்றி நாடு
நாட்டைப் பின்பற்றி உலகம்
இப்படி எல்லாமே மாறிவிடும்

**சதிசனா**
தரம் - 10
மாவடி முன்மாரி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, மட்டக்களப்பு
(இலங்கை)


# எனது அனுபவம்

நான் மலையகத்தில் ஒன்றான கந்தலோயா தோட்டத்தில் வசிக்கிறேன். கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி கற்கிறேன். நான் இப்போது இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு எழுதவிருக்கும் கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறேன்.

எனது பெற்றோர் இருவரும் தோட்டத்தில் தான் வேலை. என் குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருக்கிறோம். மிகவும் கஷ்டம். நிறையக் கஷ்டங்களுக்கு மத்தியில் எங்களைப் படிக்க வைக்கின்றார்கள்.

எனது லட்சியம் நான் வாழும் மலையகத்திற்கு ஒரு கணிதபாட ஆசிரியராக வர வேண்டும் என்பதாகும். எனது லட்சியம் நிறைவேறும் என்று எனக்கு நம்பிக்கை உண்டு. இது நிச்சயம் நிறைவேறும்.

எனது தாய் தந்தை இருவரினதும் வெடிப்புக்குள்ளான கைகளுக்கு விடுதலை கொடுக்க நான் படித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் சில வருடங்களுக்குப் பின்பு ஆசிரியை.




**லோகேஸ்வரி**
தரம் - 9
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# எனது நண்பி

தாய் இல்லாப் பிள்ளை – அவள்
யாரைத் தாய் என்பாள்
தந்தையில்லாப் பிள்ளை – அவள்
யாரைத் தந்தை என்பாள்


தாய் இல்லை, தந்தையில்லை
அன்புமில்லை அரவணைப்புமில்லை
சொந்தமுமில்லை சுகமுமில்லை
இன்பமுமில்லை இடமுமில்லை

பிறப்பால் வந்த சொந்தமில்லை – உனக்கு
குணத்தால் வந்த சொந்தமுண்டு

தாயில்லா தந்தையில்லா கவலை
உனக்கு வேண்டாமே
என் தாயும் தந்தையும் இனி உனக்கும்
தாய், தந்தையே

**சதிசனா**
தரம் - 10
மாவடி முன்மாரி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, மட்டக்களப்பு
(இலங்கை)

# INVICTUS
# (அமெரிக்கா)




இத் திரைப்படமானது மானிடத்தின் குறியீடான தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலாவினதும் அவரின் நிகரற்ற பிம்பத்தினதும் வெளிப்பாடாகும். அந்நாட்டு மக்களின் வாழ்வியல் முறையையும் தத்துரூபமாக இந்தப் படம் பேசுகிறது.

வெள்ளையரின் அடிமைத்தனத்திற் கெதிராக கிளர்ந்த நெல்சன் மண்டேலா 29 வருடங்கள் மனம் தளராது தன் தேச இனத்துக்காக சிறைவாசம் அனுபவித்து வெளியே வந்த பின்னர் தன் எதிரிகளான வெள்ளையர்களுக்கு கொடுத்த தண்டனை "மன்னிப்பாகும்". இதன் மூலம் அந் நாட்டு மக்கள் அனைவரையும் இவர் ஒரு தேசக் கொடியின் கீழ் கொண்டுவருகிறார். வெள்ளையர்கள், கறுப்பர்களிடையே தென்னாபிரிக்கா தமது தேசம் என்பதை ஊட்டுகிறார்.

தென்னாபிரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் நடைபெறும் ஒரு றகர் விளையாட்டுப் போட்டியின் போது ரசிகர்களிடையே "தாம் தென்னாபிரிக்கர்" என்ற உணர்வு இருப்பதையும், கறுப்பர்களும், வெள்ளையர்களும் அருகருகே இருந்து விளையாட்டைப் பார்வையிடுவதுடன் வெற்றிக் கோஷத்தின் உச்சமாக ஒருவருக்கொருவர் கட்டித் தழுவுவதையும் மையப்படுத்தி, தென்னாபிரிக்கா என்ற தேசம் இன ரீதியாகவும் ஒன்றிணைந்துள்ளது என்பதை மிகவும் சிறந்த முறையில் இயக்குனர் சிருஷ்டித்துள்ளார்.

படம் பார்த்து முடிக்கையில், தமது சொந்த நாட்டிலேயே பாதிப்புக் குள்ளானவர்களுக்கும், அவமதிக்கப்படுபவர்களுக்கும், அடக்கப்படுபவர்

களுக்கும் நம் நாட்டில் "நமக்கு இப்படி இல்லையே" என்ற ஏக்கம் தோன்றுவதை தவிர்க்க முடியாது.



**புஸ்பகுமார்**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# பார்

கதிரவன் கிழக்கில் உதிப்பதைப் பார்
பனித்துளிகள் மலரில் விழுவதைப் பார்
சேவல் கூவுகின்ற குரலினைப் பார்
மனிதர்கள் எழும்பும் நேரத்தைப் பார்

காலையில் வீசும் காற்றினைப் பார்
மரங்கள் ஆடுகின்ற அழகினைப்பார்
சிறுவர்கள் செல்லும் காட்சியைப் பார்
பெற்றோர் சொல்லும் புத்தியைப் பார்

சிந்தித்துக் கொண்டிருக்கும் மனிதரைப் பார்
சிரித்துக் கொண்டிருக்கும் குழந்தையைப் பார்
தள்ளாடிச் செல்லும் முதியோரைப் பார்
அவருக்கு உதவும் சிறுவரைப் பார்


மண்ணில் சிந்தும் வேர்வையைப் பார்
அங்கே விளையும் பயிரினைப் பார்
ஏழ்மையில் வாழும் மனிதரைப் பார்
அங்கு இருக்கும் அன்பினைப் பார்

பயங்கரமாய் கொட்டும் மழையினைப்பார்
ஓட்டை வீட்டில் ஒழுகும் நீரினைப் பார்
யுத்தம் தரும் அழிவினைப்பார்
மக்கள் படும் துன்பத்தைப் பார்

படிக்காமல் படம் பார்க்கும் சிறுவரைப் பார்
அங்கே பெற்றோர் படும் துன்பத்தைப் பார்
இயற்கையில் இருக்கும் அழகினைப் பார்
அதை நாசம் செய்யும் மனிதரைப் பார்

**கொவி**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# TEARS OF THE SUN
# (அமெரிக்கா)




இத் திரைப்படமானது நைஜீரியாவில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட உள்நாட்டு சிவில் யுத்தத்தில் சிக்குண்ட மக்களுக்காக தொண்டு நிறுவனத்தில் சேவை புரியும் அமெரிக்கப் பெண் டாக்டரை மீட்பதற்காக அமெரிக்கக் குழுவொன்று முயற்சிப்பதை சாராம்சமாகக் கொண்டது.

நைஜீரியாவில் குடியரசுத் தலைவர் உட்பட அவரின் குடும்பத்தினர் அனைவரும் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியுடன் தொடங்கும் இந்த சினிமா, சிவில் யுத்தத்தின் அகோர பக்கத்தைக் காட்டு கின்றது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை விட்டு, தான் மட்டும் அமெரிக்கா வரமுடியாது என்ற டாக்டரின் பிடிவாதத்தை மறுதலித்த அமெரிக்க ராணுவ மீட்புக் குழுவின் தலைவர், பின் டாக்டருடன் அகதிகளையும் அழைத்துச்செல்ல சம்மதிக்கிறார்.

யுத்தத்தில் மக்களின் துன்பங்கள் முழு சினிமாவிலும் ஊடுருவி இருக்கின்றது. இங்கு "ஹொலிவூட்" சினிமாவின் தொழில்நுட்பம், மற்றும் பிரமாண்டமான காட்சிப் படிமங்கள் என்பனவற்றுக்கப்பால் ஓர் உள்நாட்டு யுத்தத்தால் சாதாரண பொதுமக்கள் அனுபவிக்கும் துன்பியல்கள் பரவி இருக்கின்றது. தங்கள் கண் முன்னே தம் உறவினர்களை பலிகொடுத்தவர்கள் படும் துன்பம், துயரம், எங்கு பார்த்தாலும் பிணங்களும், புகைமூட்டங்களும், இடிபாடுகளும், யுத்த வெடியோசைகளுமே காணப்படுகின்றன. சிறுவர்களின் அழுகையும் பெண்களின் ஓலமும் ஒட்டுமொத்தமாக முழு சினிமாவிலும் நிரம்பியிருக்கிறது. சாதாரண பொதுமக்கள் யுத்தத்தில் சிக்குண்டு "வாழ்வதற்கான போராட்டங்கள்" மேற்கொள்வதை பார்க்கும் போது இந்த

உலகத்திற்கு யுத்தம் தேவைதானா? என்று எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறு யுத்தத்தின் கோரமுகத்தைக் கண்டும் இந்த மானிடர் ஏன் சமர் செய்கின்றார்கள்? என்று கேள்வி கேட்கத் தூண்டுகிறது. யுத்தத்தை நேசிப்பவர்களை நாம் நிராகரிக்க வேண்டும்.

இவ்வாறான தொண்டு நிறுவனத்தில் சேவை செய்யும் பெண்டாக்டரை நினைக்கும்போது வன்னி யுத்தத்தில் இறுதியாக மட்டும் தம் உயிரையும் பணயம் வைத்து மக்களுக்காக சேவைபுரிந்த நான்கு டாக்டர்களையும் நினைத்து மனதுக்குள் பூசிக்கத் தோன்றியது.


இதே தமிழ் சினிமாவாக இருந்தால் கதாநாயகன் கற்பனைக்கு அப்பாற்பட்ட விதத்தில் சண்டை செய்து அனைவரையும் உயிருடன் காப்பாற்றி, நம் அனைவரையும் முட்டாளாக்கியிருப்பார்.



**தீபன்**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)



**தவரூபன்**
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.



**கிதுஷன்**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
மட்டக்களப்பு.

# சூரியன்



அதிகாலையில் துயில் எழுந்ததும்
வானில் பார்ப்பது உன்னையே!
அந்நேரம் நீயோ சிவக்கின்றாய்
நான் ரசிப்பதும் உன் அழகையே

வானத்தில் இருந்து நீ
பளிச்சென்று ஒளியைத் தருகின்றாய்
தரையில் இருந்து தாவரங்கள்
பூக்களைத் தந்து சிரித்திடுமே

உன் வருகையால் என்றும்
ஊரெல்லாம் விழித்து எழுந்திடுமே
பறவைகள் கீச்சிட்டுப் பறந்திடுமே
வண்டுகள் ரீங்காரம் செய்திடுமே

இரவில் நீ மறைந்து போவதால்
இருட்டாய் உலகம் இருந்திடுமே – நீ
மீண்டும் வந்து தோன்றிவிட்டால்
இருட்டு மறைந்து ஓடிடுமே!

**கீர்த்திகன்**
தரம் - 11
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# என்னைப் பற்றி

நித்திரை இல்லாமல் இவளுடைய கண்கள் தவித்துக் கொண்டிருந்தன. ஆனால் மனமோ இவள் கடந்துவந்த பாதையின் மறு பக்கங்களை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

இவள் கண்களில் கண்ணீரோடு வீட்டை நோக்கி வந்தாள். இவளுடைய வீடு ஒன்றும் பெரிய அரண்மனை இல்லை. கந்தலோயாவில் சீட்டுமலை என்ற பிரிவில்தான் இவளுடைய வீடு அமைந்துள்ளது. இவளுடைய அம்மாவும் அப்பாவும் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். இவளுக்கு ஒரு அண்ணாவும் ஒரு தங்கையும் இருக்கிறார்கள்.

வகுப்பு 1–8 வரை இவள் தோட்டப் பாடசாலையில் கல்வி கற்றாள். பிறகு நகரப் பாடசாலைக்குச் சென்றுவிட்டாள். அங்கு மூன்று வருடங்கள் கல்விகற்றாள். ஆரம்பத்தில் கற்ற பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளில் இவள் முதல் மாணவியாக இருந்தவள். ஆனால் இவளுக்கு நகரப் பாடசாலையிலுள்ள மாணவர்களுடன் போட்டிபோட்டு கற்கமுடியாமல் வகுப்பில் பின்தங்கியே காணப்பட்டாள்.

இவள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றினாள். அதன் பிறகு பெறுபேறுகளும் வெளிவந்தன. ஐந்துபாடங்கள் மாத்திரமே சித்தியடைந்தாள். உயர்தரம் செய்வதற்கான பெறுபேறுகளும் இருக்கவில்லை.


இவள் மிகவும் கவலையுடன் என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தாள். அப்போது இவளுடைய தந்தை இரண்டாவது தடவையாகவும் பரீட்சை எழுதச் சொன்னார். இவளுக்கோ நகரப் பாடசாலைக்குச் சென்று நகர மாணவர்களுடன் போட்டிபோட விருப்பமே இல்லை.

அந்த நேரத்தில் தான் இவளுடைய தந்தை, இம்முறைதான் நமது தோட்டப் பாடசாலையில் க.பொ.த(சா/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார். பாடசாலை அதிபரிடம் பேசி கற்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்தார்.

கல்விச் செயற்பாடுகளில் சிறப்பாகச் செயற்படுவதற்கு அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் உதவினர். இவளுக்கு நம்பிக்கை இருக்கிறது இம்முறை பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்தில் கல்விகற்று 3ஏ எடுப்பாளென.

இந்தப் பாடசாலைக்கு வந்ததை நினைத்து இவள் பெருமைப் படுகிறாள். ஏன் என்றால் மாணவர்களை கல்வியில் மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிலும் ஈடுபடச் செய்கிறார்கள். அத்தோடு இவள் ஒரு சபையில் சத்தமாகக்கூடப் பேசமாட்டாள். அதுமட்டுமல்ல இவளை யாராவது ஏதாவது சொன்னால் உடனே அழுது விடுவாள். இப்போது இவளிடம் உள்ள பலவீனங்களை மாற்றிக்கொண்டாள். இவள் தற்போது பாடசாலையில் உருவாக்கப்பட்டுள்ள "விடியல் 2013" குழுவிலும் இயங்கிக் கொண்டிருக்கிறாள்.

இவளையே அறியாமல் கண்கள் மூடிவிட்டன. இவள் வேறு யாருமில்லை நான்தான்.



**அனுசா**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# பட்டினியால் வாட வேண்டாம்

பட்டியினில் வாட வேண்டாம்
பட்ட துயரம் இன்றோடு போதும்
சிறு பிள்ளையின் பசி போக்கி
சிறப்புடனே வாழப் பார்.

வேலைக்குச் சென்றிடலாம்
வேளாண்மை வெட்டிடலாம்
பசியினைப் போக்கிடலாம்
பஞ்சத்தைக் குறைத்திடலாம்.

எந்நேர உழைப்பினிலும்
முன்னேற முயற்சிப்போம்
வறுமையைப் போக்கி
வசந்தமாய் வாழ்ந்திடுவோம்

**சிந்துஜா**
தரம் - 9
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். மட்டக்களப்பு
(இலங்கை)

# உரிமை


மலையகத்தை சேர்ந்த நாங்கள்
கஸ்ரப்படுகின்றோம்.

நாள் முழுவதும் மலையில் கிடந்து
செத்துப் போகின்றோம்.

அட்டைக் கடியில் ரத்தம் சிந்தி
உழைக்கச் செல்கின்றோம்.


உழைப்புக்கேற்ற ஊதியத்தை
கேட்க மறுக்கின்றோம்.

கேட்டால்த் தான் விடுதலையென
உணர மறுக்கின்றோம்



தர்சன்குமார்
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# OSAMA
# (ஈரான்)




உலகளவு ரீதியில் தரமான சினிமாவை படைக்கும் ஈரானிய திரைப்படங்களில் "ஒசாமா" வும் ஒன்று. இஸ்லாமிய அடிப்படைவாத "தலிபான்" அமைப்பின் கடுமையான கொள்கைகள், தான்சார்ந்த மக்கள் மீதே விஷேடமாக பெண்கள் மீது திணிக்கும் செயற்பாட்டை விமர்சிக்கும் வகையில் இந்த சினிமா நகர்ந்து செல்கிறது.


பெண்கள் தமது அடிபாதங்கள் கூட வெளியில் தெரியாத வண்ணம் மறைத்திருக்க வேண்டும். தொழில் செய்யக்கூடாது என்பது மட்டுமன்றி அவர்களின் உணர்வுகளுக்கும் செவிசாய்க்காமல் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பெண்கள் வெளியில் சென்று தொழில் செய்யக்கூடாது என்ற நியதியில் தன் குடும்ப ஆண்களை முழுமையாக யுத்தத்தில் இழந்த ஒரு தாய் தன் யௌவனப் பருவத்து மகளை ஆண்மகனாக வேடம் பூண்டு தொழிலுக்கு அனுப்புகிறாள்.

அவளின் இஸ்டமின்றி அவள் கூந்தல் கட்டையாக வெட்டப்படுகிறது. வெட்டுண்ட தன் கூந்தலை ஒரு பூச்சாடியில் நட்டு, அதற்கு தண்ணீரும் பாய்ச்சி தனது பெண்மையின் சோகத்தினை அவள் வெளிப்படுத்துவது மிகவும் அற்புதமானதாகவும் சினிமா ரசிகர்களை முழுமையாகத் தன் பக்கம் இழுப்பதாகவும் உள்ளது.

வேலை செய்கின்ற இடத்தில் அவளின் சக தொழிலாளர்கள் அவளைப் பெண்ணென்று சந்தேகிக்க, அவள் அதை மறுதலிக்கிறாள். "அப்படியென்றால் இந்த மரத்தில் ஏறிக்காட்டு" என்று தன் சகபாடிகள் கூறுகையில், அவள் அந்த மரத்தில் ஏறுவது பெண்கள் தொடர்பான வரையறுக்கப்பட்டு நிர்ப்பந்திக்கப் பட்ட தொழில்களைக் சுட்டிக் காட்டுவதோடு ஆண் பிள்ளைகளின் மனதில்

பெண்மை தொடர்பான பிற்போக்கான எண்ணத்தை வளர்ப்பதை இந்தக் காட்சி தத்ரூபமாக எடுத்துக் காட்டுகிறது.

அனைத்துக்கும் மேலாக அவள் பெண் என்பதை அறிந்த மத அடிப்படைவாதிகள் அவளுக்குத் தண்டனை கொடுக்க எத்தனிக்கையில் அந்தக் குழுக்களில் ஒருவர் அவளின் தண்டனையை நிறுத்தி தனது மறு தாரமாக மணந்து கொள்ளும் காட்சியும், அதன் பின்புல இசையும் ஒரு மொட்டு கசங்கி வாடிப்போகும் துன்பத்தைத் தருகின்றது. அந்த சினிமாவை நுகர்ந்த என்மனம் இயல்பு நிலைக்குவர பல நாட்கள் எடுத்தன.



**யோகராணி**
விடியல் - 2013,
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# நான் விரும்பும் தொழில்

பெரியவர் செய்வது விவசாயம்
சிறியவர் செய்வது படிப்பாகும்.

தொழில் செய்வது நன்று
அதை தெரிந்து செய்வது மிக நன்று.


வாழ வைக்கும் தொழில்
கஞ்சி ஊற்றும் தொழில்
தர்மமான தொழில்
கற்றுக் கொடுக்கும் தொழில்

காலத்தால் அழியாத
அறிவை வளர்ப்பதே
நான் விரும்பும் தொழில்

**சிவனேஸ்வரன்**
தரம் - 10
நாற்பது வட்டை விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)




**தேவிகா**
தரம் - 8
மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,
மட்டக்களப்பு.




**அனோஜன்**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
மட்டக்களப்பு.

# எது முக்கியம்

எனது பெயர் மரியதாஸ். எனது குடும்பத்தில் ஐந்து பேர் இருக்கின்றோம். என்னை எவ்வளவு படிக்க வைத்தாலும் படிக்கமாட்டேன். அம்மா, அப்பா பேச்சைக் கேட்கமாட்டேன். பாடசாலைக்குப் போகச் சொன்னாலும் போக மாட்டேன். அப்படி பாடசாலைக்குப் போனாலும் ஆசிரியரிடம் பொய் சொல்லித் தப்பித்துக் கொள்வேன். நான் யார் பேச்சையும் கேட்கமாட்டேன்.

என்னை ஒருநாள் எனது அம்மாவும், அப்பாவும், அதிபரும் ஏசினார்கள். எனக்குச் சரியான கோபம் வந்தது. அதனால் நான் கொழும்புக்கு வேலைக்குப் போய்விட்டேன்.

அங்கு வேலை செய்வது எனக்கு மிகவும் கஷ்டமாய் இருந்தது. வேலை செய்யுமிடத்தில் என்னை மோசமாக நடத்தினார்கள். அப்பொழுதுதான் நினைத்தேன் எனது அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால் இவ்வளவு கஷ்டப்படத் தேவையில்லையென்று......

நான் வெளி உலகத்தை அறிந்து கொண்டேன். எனக்கு கல்வி முக்கியம் என்பதைப் புரிந்து கொண்டேன். இப்பொழுது எனது அப்பா, அம்மா பேச்சைக் கேட்டு நான் பாடசாலைக்கு வந்து நன்றாக படித்துக் கொண்டிருக்கிறேன்.


**மரியதாஸ்**
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# புகையிரதம்

பெட்டிகள் பூட்டிய புகையிரதத்தைப் பார்
கடகடத்து அது ஓடுவதைப் பார்.
தலைகளை நீட்டி மனிதர்கள்
அங்கும் இங்கும் பார்ப்பதைப் பார்

தலைகளை நீட்டிய மனிதர்கள்
கூச்சல் விடும் காட்சியைப் பார்.
புகையிரதம் வருவதைக் கண்டு
சிறுவர்கள் அடையும் மகிழ்ச்சியைப் பார்.

காடுகள் மேடுகள் கடந்து
வேகமாய் செல்லும் புகையிரதம் பார்
எனக்கும் போக ஆசைதான்
ஆனால் சிறு பயம் வருகுதே



**கிருசாந்**
தரம் - 8
மாணிக்கவாசகர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# பரீட்சையும், பெறுபேறுகளும்

2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நான் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றினேன். பெறுபேறு வரும் நாளன்று நான் மிகவும் பயந்திருந்தேன்.

ஆனால் நான் நினைத்தது போன்று சில பாடங்களிலே சிறந்த பெறுபேறு வந்தது. நான் சித்தியடைய மாட்டேன் என நினைத்த பாடங்களில் சித்தியடைந்துள்ளேன். இருப்பினும் நான் நம்பியிருந்த பாடத்தில் சிறந்த பெறுபேறுகள் வரவில்லை.

நான் படிக்காமல் விளையாட்டுத்தனமாக இருந்தேன். இரவு நேரங்களில் படிப்பதில்லை, காலையில் படிப்பதில்லை. மற்றும் குடும்பப் பிரச்சினை, வகுப்பில் நண்பர்களுடன் பிரச்சினை, பாடங்களில் விருப்பமில்லாமல் படிப்பது, பாடங்களில் கவனம் செலுத்தாமல் காதல் விடயங்களில் கவனத்தைச் செலுத்தியது. புத்தகத்தில் உள்ளவற்றை மனப்பாடம் செய்தேனே தவிர அதற்கான பயிற்சியை ஒழுங்காக பெறவில்லை.

ஆனால் இந்தமுறை இவ்வாறான தவறுகளை விடமாட்டேன். கல்வியின் மகிமையை நான் உணர்கிறேன். அதனால் நான் இவ்வாறான தவறுகளை விடாமல் உயர்தரத்தில் சிறந்தமுறையில் கல்விகற்று பல்கலைக்கழகம் செல்வேன்.

நிச்சயம் கவனமாக இனிவரும் காலங்களில் முடிவெடுக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். அப்படியில்லை என்றால் என் வாழ்வில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவரும்...

**அனுசா, துசாந்தனி, தயாகரன், யோகராணி, வசந்தகுமாரி,**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# உண்மையான கோவில்

வாழ்க்கைச் சூறாவளியில்
சருகுகளாய் மாட்டி
தூக்கித் தூரப்போடப்பட்ட
அனைவருக்கும் அடைக்கலம்.

என்னைக் கருவாக்கியவன்
எங்களை மறந்து போனான்
அன்னை அவளே
அனைத்தும் ஆனாள்
பாசமிருந்தும் காசில்லாததால்
அறிந்திராத கோயிலுக்குள்
அடைக்கலம் புகுந்தேன்.

இந்த மலர்த்தோட்டத்தில்
புன்னகை பூக்கும்
பூக்களின் வரிசையில்
நானும் புகுந்து கொண்டேன்

புதையுண்டு கிடந்த
விதைகளான எம்முள்
பூக்கள் வரச்செய்த
புனிதமான கோயில்


உறவுகளால் உதறப்பட்ட
சிறுவர்கள் வருகைக்கு
கதவுகள் திறந்திருக்கும்
சிறுவர் இல்லம்

**சிவதரன்**
தரம் - 13
விபுலானந்தா சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# நான் வைத்தியரானால்

நான் வைத்தியரானால் கந்தலோயா மக்களுக்கு சுகாதாரத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவேன். அதுமட்டுமல்லாமல் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வழிசமைப்பேன். கந்தலோயாவில் சிறிய வைத்தியசாலை அமைத்து ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்வேன். சிறுவர்களையும் பெரியவர்களையும் கவனமாகப் பரிசோதிப்பேன். நேரமுகாமைத்துவத்தோடு செயற்படுவேன். பழுதடைந்த மருந்துகளைக் கொடுக்கமாட்டேன். மாதத்திற்கு ஒருதடவை லயன்களுக்குச் சென்று பார்வையிட்டு சூழலை சுத்தமாக வைத்திருக்கக் கூறுவேன்.

இனிவரும் காலங்களில் நன்றாகப் படித்து மேற்குறிப்பிட்ட செயற்பாட்டில் ஈடுபடுவேன்.



**முரளிதரன்**
தரம் - 8
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# அழிக்கும் ஆவேசம்

இந்தக் கொடுமைக்கா
இத்தனை நாளாய் காத்திருந்தாய்!

பூமித்தாயே,
உன் பொறுமையும் போய்விட்டதா?
நீ இரண்டாய் பிளந்ததால்தானே
கடலன்னை
ஊருக்கு உலை வைத்தாள்!

இயற்கையே,
சாதிமத பேதமின்றி
ஏழை பணக்காரரென்றின்றி
சமமாக அழித்திட்டாய்.
கடலலையே
நீயும் மானிடரை அறிந்திட்டாயோ!

பூவும் பிஞ்சும்
வேரறுத்த மரமுமாகி
மனிதரெல்லாம் பட்ட துயருக்காய்
சரித்திரத்தில் இடம் பிடித்த
சுனாமி

(எழுதிய ஆண்டு 2005)

**சிறிதாதேவி**
தரம் - 10
யோகசுவாமி சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# என் இதயத்தில் இருந்து

இப்போது நான் கல்விப் பாதையின் வழியாக சென்று கொண்டிருக்கின்றேன். மிகவும் சந்தோசமாக இருக்கின்றது. உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன். கந்தலோயா பாடசாலையில் மட்டும் தரம் 11 ஆரம்பிக்கப்படாமல் இருந்திருந்தால் நிச்சயம் இன்று கொழும்பில் உள்ள ஒரு தேநீர் கடையிலோ அல்லது புடவைக்கடையிலோ வேலை செய்து கொண்டிருந்திருப்பேன். ஏன் தெரியுமா? என்குடும்ப சூழ்நிலை அப்படி.

மொத்தமாக அம்மா அப்பாவுடன் சேர்த்து நாங்கள் பத்துப்பேர். மூத்த அண்ணனை அம்மா படிக்கவைத்தார். என்னானது? அண்ணனின் படிப்பை நிறுத்திய அப்பா பதின்மூன்று வயதிலேயே வேலைக்கு அனுப்பிவிட்டார். கடைசியில் சிறுவர் நன்னடத்தைக்கு சென்றதுதான் மிச்சம்.


இரண்டாவது அண்ணனை என் அம்மாவால் படிக்கவைக்க முடியவில்லை. சித்தப்பா வீட்டுக்கு அனுப்பிவைத்தாள். அவர் தரம் 8 படிப்பை முடித்துவிட்டு வெளிப்பாடசாலைக்கு சென்றார். என்ன செய்ய ஒரு வருடம் தான் வெளிப்பாடசாலையில் படித்தார். வருமானம் போதவில்லை என்று திரும்பிவந்துவிட்டார். அப்போது சென்றவர்தான் இன்னும் கொழும்பிலேயே வேலை செய்கின்றார்.

துரதிஷ்டம் என் அக்காவை பாடசாலைக்கே அனுப்பவில்லை. இப்போது தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறார். வயது இருபத்தொன்றுதான்.


தற்போது என் குடும்பத்தில் மட்டும் ஐந்து பேர் இப்பாடசாலையில்தான் படிக்கின்றோம். என் தகப்பனுக்கு எங்கள் கல்வியைப் பற்றியோ குடும்பத்தைப் பற்றியோ எந்தவித அக்கறையும் இல்லை. எனது அம்மாவும் அக்காவும்தான் எங்களின் வலது கைகள். முதல் அண்ணன் கல்யாணம் முடித்து குடும்பமாகிவிட்டார். இரண்டாவது அண்ணா வேலை செய்கின்ற பணம் அவருக்கே போதாதாம்.

இந்தப் பாடசாலையும் நண்பர்களும் இல்லையென்றால் நான் படித்திருக்க மாட்டேன் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. என் குடும்பத்தில் நான் வெளிப் பாடசாலையில் படிப்பதற்கான பொருளாதார வசதியும் இல்லை.

உயர்தரம் படிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் அடுத்த சின்னஞ்சிறிய பூக்கள் நூலுக்கு அப்போதைய என் நிலையையும் சூழ் நிலையையும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.



**பிரபாத்,**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)




**அனோஜன்**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
மட்டக்களப்பு.



அன்புராஜ்
தரம் - 10
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
மட்டக்களப்பு.

# வறுமை

வறுமை எங்கும் வறுமை
எம்மை வாட்டும் வறுமை
உயிரை வாட்டும் வறுமை
உலகில் தொலையாதோ வறுமை.


தொல்லை தரும் வறுமை
அலைய வைக்கும் வறுமை
சும்மா நாம் இருந்தால்
வாட்டி வதைக்காதோ வறுமை

முடியாது என்று சொல்லாமல்
முடியும் என்று முயல்வோமே
விடியும் நமது வாழ்வும்
விருப்புடன் நாளும் உழைப்போமே.



**கொவி**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# எனது சுயவிபரம்



எனது வயது 11
எனது பாடசாலையின் பெயர் கேகாலை தெகியோவத்தை கந்தலோயா தமிழ் வித்தியாலயம்.
எனக்குப் பிடித்த பறவை கிளி
எனக்குப் பிடித்த பழம் அப்பிள்
எனக்குப் பிடித்த உணவு சோறு
எனக்குப் பிடித்த நிறம் பச்சை
எனக்குப் பிடித்த பூ றோஜா


**ருக்சான்**
தரம் - 6
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# வேண்டாம்

ஆசை அதிகம் வேண்டாம்
ஆபத்தில் சிக்க வேண்டாம்
நண்பரை இழக்க வேண்டாம்
நன்றியினை மறக்க வேண்டாம்

பெற்றோரை இழக்க வேண்டாம்
பெரியோரை மறக்க வேண்டாம்
குளத்திற்குள் இறங்க வேண்டாம்
குடிகாரனாய் மாற வேண்டாம்

அடுத்தவரை அடிக்க வேண்டாம்
உதவியோரை மறக்க வேண்டாம்
கல்வியை தவிர்க்க வேண்டாம்
கஷ்டத்தில் கலங்க வேண்டாம்



**மோகனப்பிரியா**
தரம் - 8
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். மட்டக்களப்பு
(இலங்கை)

# பரீட்சைப் பெறுபேறுகள்

2013 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றினேன். ஆனால் நான் எதிர்பார்த்த பெறுபேறுகளை விட குறைவாகவே இருந்தன. இப் பெறுபேறுகள் மூலம் நான் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகி விட்டேன். ஏனென்றால் எனக்கு வந்த பெறுபேறுகளின் படி உயர்தரத்தில் வணிகக் கல்வி பாடம் மட்டுமே கற்கலாம்.

ஆரம்பத்தில் இருந்து உயர் தரத்தில் கலைப் பிரிவை கற்று பல்கலைக்கழகத்திற்கு செல்வதே எனது நேக்கமாக இருந்தது. வந்த பெறுபேறுகளை வைத்துக் கொண்டு உயர்தரத்தில் வணிகக் கல்வி பிரிவைக் கற்று வெறுமனே ஒரு கணனியைக் கொண்டோ அல்லது ஏதாவது இயந்திரத்திற்கு முன்னால் அமர்ந்து கொண்டோ தொழில் புரிவது என்னால் இயலாத ஒரு காரியமாக அமைகின்றது. அவ்வாறு இயந்திரத்தோடு வாழவும் முடியாது.

ஆரம்பத்தில் நான் விரும்பியவாறு கலைப் பிரிவைக் கற்று உயிருள்ள ஜீவராசிகளிடையே உலாவித் திரியும் ஒரு பறவையாக வாழவேண்டும். என்னால் இக் காரியத்தை நிறைவேற்றவும் முடியும். இதற்காக நான் இன்னொருமுறை சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி உயர்தரத்தில் கலைப் பிரிவுக்கேற்றவாறு பெறுபேறுகளை எடுப்பேன். இதற்காக எவ்வாறான சவால்கள் வந்தாலும் முகத்திலோர் புன்னகையுடனும், வெற்றிகரமாகவும் முகம் கொடுப்பேன்.

**தீபன்**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# முயற்சி

உலகில் உயர வேண்டும்
முயற்சி உள்ள வாழ்க்கைதானே
முன்னேற முடியும்

கிடையான பள்ளமென்றால்
வெள்ளம் பாய்ந்து செல்லும்
முயற்சியுள்ள மனமென்றால்
தேடலும் உலகை வெல்ல முடியும்.

சிறகுடைந்த பறவை
சிறகடித்துப் பறக்க
முயற்சி இருந்தால் போதும்

கனவை எட்டிப் பிடிக்க
கஷ்ரப்பட்டு படிப்போம்.

மாற்றமுள்ள சமூகமாக
மாற வேண்டுமென்றால்
முயற்சியுள்ள மனிதராக
நாமும் மாற வேண்டும்.

**கதீஷ்**
தரம் - 11
மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மட்டக்களப்பு
(இலங்கை)

# எனது பாடசாலை

நான் அப்போது 10ம் தரம் கற்பதற்கு மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள தலவாக்கலை சென்கிலார் பாடசாலைக்குச் சென்றிருந்தேன். தொலைதூரம் காரணமாக எனக்குச் சுகயீனமானது. வைத்தியர் உதவியை நாடிய போது தூரம் நடக்கக் கூடாது எனக் கூறினார். இதன் காரணத்தால் என் பாடசாலை வாழ்க்கை இடைநிறுத்தப்பட்டது.

இருப்பினும் வசிக்கும் ஊரான நாகஸ்தன்னை தோட்டத்திற்கு அண்மையில் அமைந்துள்ள ஊருக்கு இடைநிறுத்திய படிப்பை தொடரச் சென்றேன். அங்கு போய்த்தான் நான் பல விடயங்களை நுண்மதியோடு அறிந்தேன். இங்கு படிப்பு மட்டுமல்லாது கலைத்துறை, விளையாட்டுத்துறை, அறிவியல்துறை எனப் பல்சார்ந்த விடயங்களையும் குவித்திருந்தார்கள். காலையில் மட்டுமல்ல மாலையிலையும் படிப்புத்தான்.

நான் மலையகப் பற்றை முதலில் அறிந்ததும் இங்குதான். கருவறையில் உள்ள குழந்தைக்கு எப்படி வெளியுலகம் தெரியாதோ, அதைப் போன்று எனக்கும் மலையகம் என்னும் பதம் தெரியாது, நான் மலையகத்தில்தான் இருக்கிறேனென்றும் தெரியாது. இருப்பினும் இங்கு வந்தபின் மலையக மண்வாசனையை அறிந்தேன்.

சில பாடசாலைகள் பாடசாலைக்காகவே மாணவர்கள் என்ற விதத்தில் இயங்கும். ஆனால் இங்கு மாணவர்களுக்காக பாடசாலை என்றபடி இயங்குகின்றது. இங்குள்ள மாணவர்களும் தூரநோக்கிலேயே பயணிக்கின்றனர்.

இன்னும் நமது மலையகத்தை நாம்தான் உயர்த்த வேண்டும் என்பதால் இங்கு நிகழும் ஒவ்வொரு விடயமும் மலையக மண்வாசனை மிக்கதாகவே இருக்கும். சென்ற ஆண்டில்தான் இப்பாடசாலையில் க.பொ.சாதாரண தரம் அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வருடத்தில்தான் பதினொருபேர் பரீட்சைக்குத் தோற்றினர். தோற்றிய மாணவர்களில் நானும் ஒரு மாணவியாவேன்.

நான் கூறிய வித்தியாசமான மலையக மண்வாசனையோடு ஒட்டிய பாடசாலை வேறு எதுவுமில்லை. கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள கந்தலோயா தமிழ் வித்தியாலயம் தான்.

**யோகராணி**
விடியல் - 2013
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# விடியல்

துயில் விட்டெழு சூரியனே
விடியலுக்காக மக்கள் காத்திருக்கின்றார்கள்

சிறுவர்களே துயில் எழுங்கள்
பள்ளிசெல்லும் நேரம் ஆகிவிட்டது.

உழவர்களே துயில் எழுங்கள்
உணவுக்கு மக்கள் காத்திருக்கின்றார்கள்

துள்ளி எழுங்கள் மிருகங்களே
புது காலை விடிகின்றது.

கீச்சி எழுங்கள் பறவைகளே
இரை தேட தயாராகுங்கள்

சீக்கிரம் மலருங்கள் மலர்களே
சூரியன் உதித்துவிட்டது.

பாய்ந்து ஓடுங்கள் அருவிகளே
இயற்கையை அழகு செய்யுங்கள்

**அருள்தாஸ்**
தரம் - 10
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# எழுவோம்

தன்னன நாதினம் தன்னானே –தன
தன்னன நாதினம் தன்னானே
தன்னன நாதினம் தன்னானே –தன
தன்னன நாதினம் தன்னானே .....

வாருங்கள்! வாருங்கள்! தோழர்களே
எழுந்து வாருங்கள்! தோழர்களே
எத்தினை சோதனை வந்தாலும்
கல்வியை விட்டு செல்லாதீர்......

நம்பிக்கையோடு கல்விகற்று
நல்வழியில் தான் ஈடுபட்டு
உறுதியோடு தான் பாடுபட்டு
உயர்த்திடுவோம் நம் மலையகத்தை.....

கண்ணீரோடு கஷ்டப்பட்டு
உழைக்கும் நம் பெற்றோருக்கு
படிப்பு தான் நாமளிக்கும்
பெரிய சொத்தென அறிந்திடுவோம்.......

**புவனேஸ்வரி**
தரம் - 11
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)



**கிரிதரன்**
தரம் - 8
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
மட்டக்களப்பு.




**காயத்திரி**
கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.

# பாடசாலை செல்வோம்

பாலர் நாங்கள் ஒன்று கூடி
பாடசாலை சென்றிடுவோம்
பண்பான கல்வி கற்று
பக்குவமாய் வீடு செல்வோம்

கல்வீட்டு வாழ்க்கையல்ல
கல்வியே சிறந்தது
அறிவினை வளர்த்திடலாம்
அனைத்தையும் அறிந்திடலாம்

இனிதாம் கல்வி கற்று
இன்பமாய் வாழ்ந்திடலாம்
சென்றிடுவோம் சென்றிடுவோம்
பாடசாலை சென்றிடுவோம்




**சிந்துஜா**
தரம் - 9
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு
(இலங்கை)

# இறந்தும் வாழ்வது

தாய் வயிற்றில் கருவாகி
தரணியில் வந்துதித்தால்
மண்ணடியில் எருவாகி
மாளவேண்டும் – இது நியதி

ஆனால்–

துன்பத்தில் இருப்போர்க்கு
துணிந்து நாம் உதவி செய்தால்

மற்றோர்க்கு தீங்கின்றி
நாமிங்கு வாழ்ந்திருந்தால்

நல்லன நினைத்து
நன்மைகள் செய்திருந்தால்

ஊன் மறைந்தாலும்
நாம் வாழ்வோம்

(எழுதிய ஆண்டு 2004)

**டோதரன்**
தரம் - 8,
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# மலையகத் தாயும் அவளின் மகனும்

தன்னானே தன்னா னானே தன
தன்னானானே தன்னானானே

கூட மேல கூட வச்சி
கொழுந்தெடுக்க போறவளே!

காடு மேடு அலைஞ்சி புள்ள
நெர புடிக்க போறவளே!

ஒவ்வொரு அரும்புலையும்
பொருளாதாரம் இருக்கு புள்ள

தன்னானே தன்னா னானே தன
தன்னானானே தன்னானானே

கல்லு முள்ளு கீழ் இருந்து
ஒன் ரத்தம் சிந்துதம்மா
ஒங் கஸ்ரம் தீரத்தான்
ஒம் புள்ளையைத்தான் படிக்கவையி

கஸ்ரப்பட்டு பாடு பட்டு
ஏம் புள்ளையைத்தான் படிக்கவைப்பேன்.

**ஜினோதனி**
தரம் - 8
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# அண்ணா



எனக்கு உணவு தருபவர் அண்ணா
எனக்காய் உழைப்பவர் அண்ணா
என்னைப் பாராட்டுபவர் அண்ணா
என்னை அள்ளி அணைப்பவர் அண்ணா

என்னைப் படிக்க வைப்பவரும் அண்ணா
எனக்காய் வாழ்பவரும் அண்ணா
எனது உள்ளம் குளிர வைப்பவர் அண்ணா
என் ஆசையைத் தீர்ப்பவர் அண்ணா
எல்லாமே எனது அண்ணாதான்.

**வேணுசா**
தரம் - 8
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். மட்டக்களப்பு
(இலங்கை)

# யுத்தம்

விடியற்காலையில்
யன்னலைத் திறந்தபோது
இரத்த வெள்ளம்
வழிந்தோடியது.

நான் பார்க்க விரும்பியதோ
அதிகாலை
சூரியனைத்தான்.

கதவைத் திறந்தால்
வெளியே
இறந்த உடல்கள்தான்.

நான் காண விரும்பியதோ
அழகான
பூக்களைத்தான்.

என்ன நடக்கிறது?
அடுத்தவரிடம் கேட்டேன்.

யுத்தம்.
பதில் வந்தது.

வெளியே போக
முடியவில்லை.

(எழுதிய ஆண்டு 2004)

**விஜிகலா**
தரம் - 9
யோகசுவாமி சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# மலையகத்துச் சீவன்கள்

கண்ணீருக்கு பஞ்சமில்லை
கவலைகளும் கொஞ்சமில்லை.

கைகளிலும் வெடிப்புகள்
கால்களிலும் இரத்த ஓடங்கள்.

மரணத்தின் வாயிலுக்கு
பிரவேசிக்கும் சீவன்கள்.

கவர்ச்சியான மலையகத்திலே
கவலையான சீவன்கள்.

குத்திக் கிழிக்கும்
முட்களே ஏமாறும்.
மனதின் காயங்களைவிட
முட்களின் வலியல்ல.

கண்ணீரும் கந்தலுமாக தொழிலாளர்
சிரிப்பு கும்மாளத்துடன் துரைமார்கள்!.

தேயிலை பறிக்கும்
பெண்களின் சோகம்
தேயிலைத் தூளுக்குள்
மறைந்தே இருக்கும்.

**கிசாந்தினி**
தரம் - 10
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# எங்களின் பிரச்சினைகள்

சிறுவர்களாகிய எங்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டு. அவைகள் பாலியல் வல்லுறவு, கல்வியின்மை, பாதுகாப்பின்மை, வீட்டுவேலைகளுக்கு அனுப்புதல், உணவின்மை, உடையின்மை, வெளிநாடுகளுக்கு விற்றல்.... என்று பலவகைப்படும்.

கல்வியின்மையை எடுத்துக் கொண்டால், மாணவர்களுக்கு பாடசாலைக்கு கொண்டு செல்வதற்குரிய உபகரணங்கள் வாங்குதவற்கு வசதிகள் இல்லை. கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால் அங்கே அநேகமானோர் விவசாயத்தை நம்பித்தான் வாழ்கிறார்கள். இதில் கிடைக்கும் வருமானம் உணவிற்கே போதுமானதாக இல்லாதபோது படிப்புக்கு எங்கே போவது? இதனால் சிறுவர்களின் கல்விதான் பாதிக்கப்படுகிறது.

பாதுகாப்பின்மையை எடுத்துக்கொண்டால், வாகன விபத்துகளில் அகப்படுபவர்கள் அதிகம்பேர் சிறுவர்கள்தான். கிராமங்களில் வீதிப் போக்குவரத்துக்கான சமிக்ஞை விளக்குகளோ வேறு விதமான ஒழுங்குகளோ இல்லை. வாகனமோட்டுபவரும் அதிகம் கவனம் எடுப்பதில்லை. பாலியல் வல்லுறவு, பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படும் சிறுவர்களின் நிலமையோ இன்னும் கொடுமையானது. இத்தகைய கொடுமைகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க இங்கு எந்த நிறுவனங்களுமே இல்லை.

படிக்கும் வயதில் சிறுவர்கள் வீட்டு வேலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இதனால் கல்வியைச் சீராகத் தொடரவோ, கல்வியில் கவனத்தைச் செலுத்தவோ முடியாது போகிறது. இன்னும் சிலர் சிறுவர்களை வெளிநாட்டுக்கும் வேலைகளுக்கு அனுப்புகிறார்கள். அல்லது விற்றுவிடுகிறார்கள். இதனால் சிறுவர்களின் எதிர்காலம் முளையிலேயே கிள்ளி எறியப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட எல்லா சிறார்களுக்கும் பொதுவான பிரச்சினைகளுடன் தாய், தந்தை உறவை இழந்து வாடும் எமக்கு இன்னும் மேலதிக பிரச்சினைகள் உண்டு. வாழ்வதற்கென்று எமக்கு நிரந்தர இடமில்லை. தற்காலிகமாக கிடைக்கும் இடங்களில் சூழல் சுத்தமில்லை. இதனால் நாம் நோய்வாய்ப்படுகின்றோம். கிணற்றுத்தவளைகளாக எங்கள் இல்லங்களிலேயே இருக்கின்றோம்.

இவை தவிர எங்களுக்கு இன்னும் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றிற்கு ஒரு பதில் எங்களுக்கு கிடைக்குமா?

(எழுதிய ஆண்டு 2004)




**வினோதினி**


தரம் - 8

யோகசுவாமி சிறுவர் இல்லம், மட்டக்களப்பு

(இலங்கை)



**ஜெயகாந்தன்**
தரம் - 10
விபுலானந்தா சிறுவர் இல்லம், மட்டக்களப்பு.




**தேவிகா**
தரம் - 8
மாவடி முன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,
மட்டக்களப்பு.

# பூவிடம் கேட்பேன்

பூவே,
மலர்ந்து வண்டுக்கு
அமிர்தம் கொடுப்பாயா?

சூரியனைக் கண்டு
பூவே சிரிப்பாயா?

தென்றல் காற்றில்
குதூகலமாய் ஆவாயா?

தேனருந்தும் வண்டுகளை
வாவென்று அழைப்பாயா?

பூவே,
எனது அப்பா, அம்மா
எங்கே என்றும் சொல்வாயா?

(எழுதிய ஆண்டு 2004)

**விஸ்ணுகாந்தன்**
தரம் - 8,
விபுலானந்தா சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# அன்பு அம்மா

அம்மா நல்ல அம்மா
அன்பு காட்டும் அம்மா
கோபம் என்று வந்தால்
தூக்க மாட்டாள் அம்மா

இரக்கமான அம்மா
கருணையான அம்மா
சின்னப் பிள்ளை கண்டால்
முத்தம் கொடுப்பாள் அம்மா

செல்லம் காட்டும் அம்மா
ஆர்வம் காட்டும் அம்மா
மகிழ்ச்சியோட என்னை
பள்ளிக்கனுப்பும் அம்மா.



**கோமதி**
தரம் - 8
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். மட்டக்களப்பு
(இலங்கை)

# அப்பா

அப்பா என்று அழைக்கவே
என் ஆருயிர் துடிக்குது
என்னை தோழில் போட்டு
வளர்த்ததும் நீங்களே

எனக்குப் பேச வார்த்தை
எடுத்துத் தந்ததும் நீங்களே
என் குற்றங்களை மன்னித்து
குதூகலமாய் வைத்ததும் நீங்களே

என்னைக் கண்டித்ததும் நீங்களே
என்னைக் கவனித்ததும் நீங்களே
கண் இமை மூடாமல் என்னைக்
கவலையின்றி வளர்த்ததும் நீங்களே

நான் படிக்கும் போது
பத்து நிமிடம்கூட
கண் அயராமல் பார்த்தது நீங்களே
வையகத்தில் வாழ்ந்திடவே உங்கள்
ஆசியைத் தேடுகின்றேன் என்றுமே

**விதுசன்**
தரம் - 10
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)


# ஆட்டுக்குட்டி

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
மென்மையான ஆட்டுக்குட்டி
மெதுவாய் ஓடும் ஆட்டுக்குட்டி
அருமையான ஆட்டுக்குட்டி

கம்பு போன்ற கால்கள்
கிளைகள் போன்ற கொம்புகள்
மீன்கள் போன்ற கண்கள்
மினுமினுக்கும் ரோமம்

அழகின் அங்கம் ஆட்டுக்குட்டி
அச்சம் இல்லா ஆட்டுக்குட்டி
நான் வளர்த்த ஆட்டுக்குட்டி
கருமையான ஆட்டுக்குட்டி

புலியைப் போல பாயும்
அன்பு மிக்க ஆட்டுக்குட்டி
கோரை தின்னும் ஆட்டுக்குட்டி
பால் சுரக்கும் ஆட்டுக்குட்டி



**விதுசன்**
தரம் - 10
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# விடுகதை

01. அக்காள் விதைத்த முத்து.
அள்ள முடியாத முத்து.

02. அழகழகாய் பூப்பூக்கும்
அம்மாடி என்று காய் காய்க்கும்.

03. ஒருமுறை விழுந்த பல்
மறுமுறை முளைக்காது

04. அள்ளலாம்,
கிள்ள முடியாது

05. அகன்ற வாய் உடையார்
திறந்த வாய் மூடார்

06. அடிக்காத பிள்ளை
அலறித் துடிக்குது

07. அண்ணன் கல்வியில் வாங்காதது
தம்பி கடையில் வாங்கியது

08. அடி மலர்ந்து
நுனி மலராப் பூ

09. அனலிலே பிறக்கும்
ஆகாயத்திலே பறக்கும்

10. அலையலையாய் ஆடி வரும் கடலுமல்ல
நிலையாக நிற்காது நிலவுமல்ல

11. அம்மிக் குழவி போல் பூ இருக்கும்
அரிவாள் பிடி போல் காய் இருக்கும்

12. அங்குல மாட்டுக்கு அரை மைல் வால்

1. கோலம்
2. நெருஞ்சி
3. சீப்பு
4. தண்ணீர்
5. செக்கு
6. சங்கு
7. பட்டம்
8. வாழைப்பூ
9. புகை
10. முகில்
11. வாழைப்பழம்
12. ஊசி நூல்

**தஜேகாந்தன்**
தரம் - 8
விபுலானந்தா சிறுவர் இல்லம், மட்டக்களப்பு
(இலங்கை)

# வேடனும் குருவிகளும்

ஒரு வேடன் வழமை போன்று வேட்டையாட காட்டிற்குள் சென்றான். அவன் அங்குமிங்கும் அலைந்து திரிந்தான். ஓர் மிருகமும் அகப்படவில்லை.

தான் நின்ற காட்டைவிட்டு அடுத்த காட்டிற்குள் ஏதோ உரத்த குரலைக் கேட்டான். உடனே அவன் அக் காட்டிற்குச் சென்றான்.

மரங்களையும் நிமிர்ந்து பார்த்தான். அப்போது இரு குருவிக் குஞ்சுகள் கத்துவதைக் கண்டான். கீழ் குனிந்து பார்த்தான் ஒரு பாம்பு ஏறுவதைக் கண்டான். பாம்பைக் கண்டுதான் குருவி கத்துகிறது என்று நினைத்தான். உடனே ஓங்கி பாம்பை வெட்டினான்.

"நீ எங்கே நின்று வந்தாய். எங்களைத் தின்னவந்த பாம்பைக் கொன்று விட்டாய்" என்றது குருவி. அவன் நின்று கொண்டிருந்த போது தாய்க் குருவி வந்தது.

"ஏன் வந்தாய் மானிடா" என்று கேட்டது. வேடனுக்கு நடுங்கத் தொடங்கியது.

"நான் வேட்டையாடுவதற்கு வந்தேன் ஒரு மிருகமும் அகப்படவில்லை. இங்கு கத்தும் சத்தம் கேட்டபோது வந்தேன். பாம்பு ஒன்று உனது பிள்ளைகளை உண்ண வந்தது. அதை கொன்று விட்டேன். கீழ் பாரும்" என்றான்.

வெட்டப்பட்ட பாம்பைப் பார்த்த தாய்க் குருவி மகிழ்ச்சியடைந்து பாராட்டியது.

"என் பிள்ளைகளைக் காப்பாற்றிய உன்னை எப்படி வாழ்த்துவது" என்றது.

இருட்டாகியது.

வேடன் விடைபெற்று தனது வசிப்பிடத்துக்கு வந்தான். வேட்டையாடியபோது இல்லாத மகிழ்ச்சி உதவியபோது இருப்பதை உணர்ந்தான்.

**தசாழினி**
தரம் - 6
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். மட்டக்களப்பு
(இலங்கை)

# வறுமை

ஒரு கிராமத்தில் வறுமைப்பட்ட குடும்பம் இருந்தது. தாய், தந்தை இருவரும் மூன்று பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். அதில் ஒரு பிள்ளையும் கல்யாணம் பண்ணல்ல. மூத்த மகள் கந்தவல்லி வீட்டில் இருக்கிறாள். இரண்டாவது மகள் சங்கரி தரம் 10ல் கல்வி கற்கிறாள். மூன்றாவது மகள் குமாரி 5ஆம் ஆண்டு படிக்கிறாள். தந்தை வரம்பு வேலைக்குப் போகிறார். தாய் நெல்லுக் குத்தி காலம் கழிக்கிறாள்.

இப்படி வாழ்க்கை நடத்தி வந்த போது ஒரு நாள் குமாரிக்கு சோதினைக் காசு 50 ரூபாய் என்று சொன்னாள். அதைக்கேட்ட தாய் கவலைப்பட்டாள். குமாரி சொன்னாள் "அம்மா நாளைக்கு எப்படியாவது காசு கொண்டு வரட்டாம்." என்றாள். தாயும் அங்குமிங்கும் காசு வாங்குவதற்கு ஓடினாள். ஓரிடமும் காசு கிடைக்கவில்ல. அவ்வூரிலே அருமைக்கும் பெருமைக்கும் பணக்காறி மனோகரி. குமாரியின் தாய் மனோகரியிடம் கடப்பில் சென்று "மனோகரியக்கா, மனோகரியக்கா" என்று கூப்பிட்டாள். அந்தச் சத்தம் கேட்ட மனோகரி "ஓய் என்னடி" என்று விசர் நாய் கேட்ட மாதிரி கேட்டாள்.

"மனோகரியக்கா, என்ர பிள்ளைக்கு சோதினைக் காசு தரட்டாம். நீ எப்படியாவது கொஞ்சம் காசு தரவேணும்" என்றாள். அதைக் கேட்ட மனோகரி "எனக்கிட்ட காசும் இல்ல, கத்தரியும் இல்ல" என்றாள். குமாரியின் தாய் கவலையுடன் "போய்த்து வாரன்" என்று சொல்லி வீடு திரும்பினாள்.

மாலை மயங்கி தாகம் தவிர்ந்து இருட்டாகியது. இரவு நித்திரை செய்தார்கள். குமாரியின் தாய்க்கு கண்ணுக்கு நித்திரையே வரவில்லை. "நாளைக்கு எழும்பினால் பிள்ளை கத்துவாள்" என்று மனம் துடித்தது.

விடிய நாலு மணியளவில் எழும்பி மனோகரியின் வீட்டுப் பக்கம் சென்று "மனோகரியக்கா" என்று ஒரு சத்தம் கூப்பிட்டாள். "ஓய் வாரேன்" என்று கடப்படிக்கு வந்தாள் மனோகரி. "நாளைக்கு அவரு வேலைக்குப் போவார். வந்த பிறகு காசு தருவன்" என்றாள் குமாரியின் தாய்.

மனோகரி வட்டிக்குச் சட்டி சுட்டவள். "வட்டியோடு தருகிறன்" என்றாள் குமாரியின் தாய். மனோகரி சரி என்று 50 ரூபாய் கொடுத்தாள்.

பெருமையோடு வீட்டிற்குச் சென்றாள் குமாரியின் தாய். அந்தக் காசை மகள் குமாரியிடம் கொடுத்தாள். குமாரி மகிழ்ச்சியோடு பாடசாலைக்குச் சென்றாள்.

அதன் பிறகு குமாரியின் தந்தை வரம்பு வேலைக்குச் சென்று காசு கொடுத்தார். குமாரியின் தாய் நாளும் கோளும் தவறாமல் மனோகரியிடம் கொண்டு கொடுத்தாள்.

ஒரு நாள் மூத்த மகள் கந்தவல்லி கடைக்குச் சென்று கொண்டிருந்த வழியில் கந்தன் என்றொருவன் வந்தான். கந்தவல்லியைக் கண்ட கந்தனுக்கு அவள் மேல் விருப்பம் வந்தது. கந்தவல்லிக்கும் அவன் மேல் விருப்பம் வந்தது. இருவரும் தமது பெற்றோர்களிடம் சென்று சொன்னார்கள் பெற்றோர்களும் சம்மதித்து இருவருக்கும் கல்யாணம் நடைபெற்றது.

இரண்டாவது மகள் சங்கரி தனது படிப்பில் ஆர்வம் காட்டி எஞ்சினியர்ப் பட்டம் கிடைத்தது.

மூன்றாவது மகள் குமாரி 05ம் ஆண்டு புலமைப் பரிசிலில் ஆர்வம் காட்டி தேசிய ரீதியில் 190 புள்ளிகளைப் பெற்று 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்டாள்.

சங்கரியும், குமாரியும் தாம் கற்ற கல்வியால் தங்கள் சமூகத்திற்கும் உதவினார்கள். அது மட்டுமல்ல தாய், தந்தைக்கும் பாடசாலைக்கும், சமூகத்திற்கும் நல்ல பெயரினை ஈட்டிக் கொடுத்தார்கள்.

**ரொசானி**
தரம் - 9
கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். மட்டக்களப்பு
(இலங்கை)

# எனது அனுபவம்

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பது நமது முன்னோர்களின் வாக்காகும். என்னைப் பொறுத்தவரையில் என் வாழ்க்கையில் திருவாக்கு என்றுதான் கூறவேண்டும். ஏன் என்றால் என்னைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் விளையாட்டில் ஆர்வமற்றவனாகவே காணப்பட்டேன்.

விளையாட்டு என்றால் எனக்கு வெறுப்புத்தான். இதனாலேயே என்னை எல்லோரும் கேலி செய்வார்கள். ஏனெனில் என் வகுப்பைச் சேர்ந்த சக நண்பர்களும் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவார்கள். ஆனால் நான் மட்டும் விளையாட்டு என்றால் விலகித்தான் இருப்பேன். இப்படியே எனது கடந்த காலங்களைக் கடந்துவிட்டேன்.

எனது பாடசாலையில் இந்தவருடம் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெறும் என்பதைக் கேள்விப்பட்டதும் சற்றுச் சலிப்பாகவே இருந்தது. இருந்தும் நான் அதை வெளிக் காட்டிக்கொள்ளவில்லை. பயிற்சி அளிக்க ஆரம்பித்த பின்பே நான் விளையாட்டில் எவ்வளவு பின்தங்கியுள்ளேன் என்பது எனக்குத் தெரியவந்தது. அதன் பின் பாடசாலை விளையாட்டுத் துறை ஆசிரியராலும், இல்ல ஆசிரியராலும் முறையாக ஓடுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

முறையாகப் பயிற்சிகளைப் பெற்ற நான் 2014ம் ஆண்டு இல்ல விளையாட்டுப் போட்டியில் மரதன் ஓட்டத்தில் பங்குபற்றினேன். இதன் பயனாக மரதன் ஓட்டத்தில் முதலிடத்தைப் பெற்றேன். இதையறிந்த சிலருக்கு எதிர்பாராத விடயமாகவே இருந்தது.

இந்த வெற்றி என் வாழ்க்கையில் தன்னம்பிக்கையை உருவாக்கியது. அதன்பின் ஏனைய நெடுந்தூர ஓட்டப் போட்டிகளிலும் பங்குபற்றினேன். அதிலும் முதலிடங்களைப் பெற்றேன். இதன் பிரதிபலனாக 2014 இல்ல விளையாட்டுப் போட்டியின் சிறந்த வீரருக்கான விருதையும் பெற்றேன்.

இந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது என் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இவ்விளையாட்டுப் போட்டியில் ஏற்பட்ட அனுபவமானது மேலும் விளையாட்டின் மீது ஈர்ப்பை ஏற்படுத்தியது.

**கஜன்**
தரம் - 10
கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# சின்னஞ்சிறிய பூக்கள் – 4

நான்காவது தடவையாகவும் சிறுவர் உலகங்களின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்வடைகின்றோம்.

பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு உதவுவதை அடிப்படையாகக் கொண்ட எமது செயற்பாடுகள் இந்த வருடமும் வளர்ச்சி, முயற்சி, பின்னடைவு, தடைகள், நிதியின்மை, நம்பிக்கைளுடன் தொடர்கின்றன. உங்களைப் போன்ற நண்பர்களின் ஆதரவு, செயற்படுபவர்களின் முயற்சி, பிள்ளைகளின் உற்சாகம், எங்கள் எல்லோரினதும் நம்பிக்கை.... இவையே உதவி.யின் பலம்.

...... 2013, 2014ஆம் ஆண்டுகளில் முதன்மைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்.

......(மட்டக்களப்பு, இலங்கை) விபுலானந்தா சிறுவர் இல்லத்தில்–கதைசொல்லல்

......(மட்டக்களப்பு, இலங்கை) மாணிக்கவாசகர் சிறுவர் இல்லத்தில் கதைசொல்லல், எழுதுதல், வாசித்தலை ஊக்குவிக்கும் "மெல்லக்கற்றல்"

......(மட்டக்களப்பு, இலங்கை) பட்டிப்பளைப் பிரதேசத்தில் கதைசொல்லல், உலக சினிமாவுடன் எல்லைக் கிராமங்களில் வசிக்கும் மிகவும் வறுமையான பிள்ளைகளுக்கான கணனிக் கற்கை நெறி,

(நாவலப்பிட்டி, இலங்கை) கந்தலோயாத் தோட்டத்தில், இரு ஆசிரியர்களுக்கான உதவித்தொகை, முன்பள்ளி, விடுதி வசதி மூலம் பிள்ளைகளின் அடிப்படைக் கல்விக்கு உதவுதல், கதைசொல்லல், உலக சினிமா.

கந்தலோயாவில் பிள்ளைகளின் அடிப்படைக் கல்விக்கு உதவியதன் விளைவாக கந்தலோயாத் தமிழ் வித்தியாலயத்தில் இருந்து முதல் தடவையாக 2013 மார்கழியில் 13 மாணவர்கள் க.பொ.த சாதரணதரப் பரீட்சைக்கு தோற்றி சித்தியெய்தியதுடன், 10 மாணவர்கள் இவ் வருடத்தில் க.பொ.த.உயர்தரம் கற்றுக் கொண்டிருக்கின்றனர். "விடியல் –2013" என செயற்பட்டுவரும் இம் மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குச் சென்று உயர்தரக் கல்வியினைத் தொடர்வதற்கும் உதவுகின்றோம்.

இந்தப் பின்னணிகளில் பிள்ளைகளிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை, சித்திரங்கள், சினிமா விமர்சனங்கள் என வெளிப்பட்ட அவர்களின் உலகங்களை தொகுத்து "சின்னஞ்சிறிய பூக்கள்– 4" நூலுருவில் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். தமது உலகங்களினூடாக உங்களுடன் தொடர்பு கொள்ளும் அவர்களின் ஆக்கங்களை ஒப்பிடுதல், பொதுமைப்படுத்துதலை விடவும் அவர்கள் நிலையில் நின்று உணர்தலும், வாசித்தலுமே அவர்களை அறிந்து கொள்ள உதவும். உங்களின் கருத்துக்கள், அபிப்பிராயங்களை நீங்களும் பகிர்ந்து கொள்ளுவீர்களாயின், அவற்றினை நாம் பிள்ளைகளிடம் கொண்டுசேர்ப்போம்.

பிள்ளைகளுக்குப் பயன்படும் என்று உங்களால் அறியப்பட்ட புத்தகங்கள், சினிமாக்களின் விபரங்களை எங்களுக்கு தந்துவுங்கள்.

பரீட்சார்த்த முயற்சியாக சென்ற வருடம் வெளியான "சின்னஞ்சிறிய பூக்கள்– 3" புத்தகத்தைக் கொடுத்து, இந்த வருடம் வெளியிட இருக்கும் புத்தகத்திற்கு முற்கூட்டியே உதவி (CROWDFUNDING) செய்வீர்களா? என்று சமூக அக்கறைகொண்டவர்கள் எனப் பொது வெளியில் அறியப்பட்ட குறிப்பிட்ட நண்பர்களிடம் கேட்டிருந்தோம். பலர் மௌனத்தையே பதிலாகத் தந்தாலும், உதவி கோரப்பட்ட நண்பர்களில் சிலரும், இதுவரை அறிமுகமேயில்லாத பலரும் புத்தகத்திற்கான முழு நிதியையும் தந்து நம்பிக்கையளித்தார்கள்.

அரசு, அரசு சாரா நிறுவனங்கள், வணிக நிறுவனங்களிடம் நாம் காசு கேட்பதில்லை. நண்பர்கள் தரும் தனிப்பட்ட நிதியுதவி மட்டுமே உதவி.க்கான ஒரேயொரு நிதி மூலம். இதுவே கடந்த 12 வருடங்களாக எமது செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு ஆதாராமாகும்.

இருக்கின்ற வளங்களுடனும், பல வழிகளில் உறுதுணையாக எங்களுடன் இணைந்திருக்கின்ற நண்பர்களின் ஆதரவுடனும் எங்களால் செயற்படுத்த முடியுமானதை இவ்வருடமும் தொடர்வோம்.

அனைத்து நண்பர்களுக்கும் நன்றி.

உதவி .நண்பர்கள்
www.uthawi.net

MSW

உதவி.uthawi
uthawi.media